


# தமிழரசு

அக்டோபர் 1-15, 1999 ரூ.5









# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98




**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2030

புரட்டாசி

அக்டோபர் 1–15, 1999

மலர் : 31 இதழ் : 7

விலை ரூ.5


## இந்த இதழில்...


★ தமிழக அரசுக்கு குடியரசுத் துணைத் தலைவர் பாராட்டு ---------- 2

★ இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் கணினி பயிற்சி ---------- 3

★ காந்தியடிகளின் கொள்கைகளைப் போற்றும் அரசு ---------- 6

★ தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சிறுவணிகக் கடன் ---------- 10

★ பாரதிதாசன் பரம்பரை ---------- 12

★ பிற்படுத்தப்பட்டோர்க்கு சிறுபான்மையினருக்கு கடன் உதவிகள் ---------- 16

★ நீர்வள ஆதாரங்கள் ---------- 18

★ 1999 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் ---- 20

★ புதுப்புனல் ---------- 30

★ டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கும் விழா ---------- 31

★ ஆதிதிராவிடர் – பழங்குடியினருக்கு உதவிகள் ---------- 35

★ முதலமைச்சர் போலீஸ் பதக்கம் ---------- 37

★ அரிசி விலைக் குறித்து தமிழக அரசு விளக்கம் ---------- 38

★ விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள் --- 41

★ பாண்டியரும் செப்பேடுகளும் ---------- 45


**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்.**

நமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி, அவர் வெட்கித் தலைகுனியும்படியாக அவருக்கு நன்மை செய்வதுதான்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

**முதல்பக்க அட்டையில்**

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறி மையங்கள் தொடக்க விழா

**கடைசிப் பக்க அட்டையில்**

காந்தியடிகள் பிறந்தநாள் விழா



# தமிழக அரசுக்கு குடியரசு துணைத்தலைவர் பாராட்டு

தமிழக மேல்நிலை பள்ளிகளில் கணிப்பொறிப் பாட திட்டம் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தொலை நோக்குடன் இந்த திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக முதல்வர் கலைஞர் அவர்களை பெரிதும் பாராட்டுகிறேன். அவரது இந்த அரிய முயற்சியை வரவேற்கிறேன்.

இந்த திட்டத்தைக் கொண்டு வந்த முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழகம் பெறுவது சிறப்புடையது ஆகும். கணிப்பொறி அறிவைப் பெறுவது மிகவும் அவசியமான ஒன்றாகி விட்டது. மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கச் செய்வது எதிர்காலத்தில் பெரும் வெற்றியை அளிக்கும் என்பதில் ஐயம் இல்லை. சிறந்த சமுதாய கடமைக்கு இந்த திட்டம் பெரிதும் துணை நிற்கும்.

### வேலைவாய்ப்புக்கு கணிப்பொறி உதவும்

முன்னேறிய நாடுகளில் கணிப்பொறிக் கல்வி ஏற்கப்பட்ட ஒன்றாகும். இந்தியா போன்ற நாடுகளுக்குக் கணிப்பொறி கல்வி தேவையான ஒன்று. இது வேலைவாய்ப்புக்குப் பெருமளவில் உதவும். அரசுத்துறை, வர்த்தகம், வீடுகள் போன்றவற்றிலும் இன்று கணிப்பொறி தேவைப்படுகிறது. அந்த நிலையில் நம்நாட்டு மாணவர்களுக்கு கணிப்பொறிக் கல்வி தருவது மிக பொருத்தமானது. இந்த திட்டத்தால் கிராமப்புற மாணவர்கள் பயன் அடைவார்கள் என்பதை எண்ணும் போது பெரும் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

*– பள்ளிகளில் கணிப்பொறி பாடத்திட்டத்தை தொடங்கி வைத்து மேதகு குடியரசுத் துணைத்தலைவர் திரு. கிருஷண்காந்த் ஆற்றிய உரையிலிருந்து...*

★ ★ ★

# இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் கணினி பயிற்சி

– முதல்வர் கலைஞர்

**மா**மழை போற்றுதும், மாமழை போற்றுதும் என்று சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் எழுதியுள்ள பாடல் உங்களுக்கெல்லாம் தெரியும். இன்று மாமழையைப் போற்ற வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். மழை வரக்கூடாதென்று எண்ணிய சிலபேருடைய நினைவுக்கு எதிராக ஒரு வார காலமாக வந்த மழையை நாம் போற்றுகிறோம். “இன்று மழை வராதா, விழா கெடாதா” என்று எண்ணியவர்களின் நினைவுக்கு மாறாக ஒருசில மணி நேரம் மழை ஓய்வளித்திருக்கிறதே. அதற்காகவும் மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் தமிழகத்திலே உருவாக இருக்கின்ற 666 பள்ளிகளிலே கணினி மையங்களைத் தொடங்கி வைக்கவிருக்கிறார்கள். நாமெல்லாம் இங்கே கூடி அடுத்த நூற்றாண்டிற்கு இளைஞர்களை ஆயத்தப்படுத்தும் முயற்சியில் தமிழகத்திலே உள்ள இளைஞர்களை மாத்திரமல்ல, தமிழகம் வழிகாட்டியாக, இருந்து இந்தியத் திருநாட்டிலே உள்ள இளைஞர்களையெல்லாம் ஆயத்தப்படுத்தும் முயற்சிக்கு இன்றைய தினம் கால்கோள் விழா நடத்தப்படுகின்றது.

அந்த விழாவை நடத்துவதற்கு முற்றிலும் தகுதியானவர் நம்முடய மேதகு குடியரசுத் துணைத் தலைவர் பெருமதிப்பிற்குரிய கிருஷ்ணகாந்த் அவர்கள் ஆவார்கள். அதனால்தான்அவர் இந்த விழாவிற்கு வரவேண்டுமென்று நான் அவரிடத்திலே வேண்டுகோள் விடுத்த போது, தட்டாமல் தயங்காமல் உடனடியாக ஒத்துக்கொண்டு இந்த விழாவிற்கு வருகை தந்திருக்கிறார்கள்.

### தேசிய இயக்கத்தில் வீறு கொண்டு எழுந்த இளைஞர் கிருஷ்ணகாந்த்

அவர்களுக்குத் தமிழகத்திலே ஓரளவு சொந்தம் உண்டு. எப்படியென்றால் இடைக்காலத்திலே சில மாத காலம் தமிழகத்தின் ஆளுநராக அவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களை நான் பல ஆண்டுகளுக்கு முன்பே நன்றாக அறிவேன். புது யுகம் இந்தியாவிலே தோன்ற வேண்டுமென்று எண்ணிய ஐந்தாறு வாலிபர்கள் தேசிய இயக்கத்திலே அன்றைக்கு வீறு கொண்டெழுந்தார்களே, அந்த ஐந்தாறு வாலிபர்களில் ஒருவர் நம்முடைய கிருஷ்ணகாந்த் அவர்கள். அவர் ஒருவர்தான் இன்றைக்கு மிச்சம் இருப்பதாக நான் கருதுகின்றேன். அவர் இன்றைய தினம் இந்த விழாவைத் தொடங்கிவைத்து கணினி மையங்களைத் தமிழகத்திலே அறிமுகப்படுத்தி இளம்






மாணவர்களுக்கு ஒரு உத்வேகத்தை, ஊக்கத்தை அளிப்பதற்காக வருகை தந்திருப்பது மிகமிக பாராட்டத்தக்கது, வரவேற்கத்தக்கது. எனவே உங்கள் அனைவரோடும் சேர்ந்து தமிழக மக்களின் சார்பாக அவரை மீண்டும் மீண்டும் நன்றியுணர்வோடு வரவேற்க விரும்புகிறேன்.

இன்று வேகமாக உருவாகி பரவி வருகின்ற தகவல் தொழில்நுட்பத்தைப் பற்றி கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும், தம்பி முரசொலி மாறன் அவர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இதைப்பற்றி சில குறிப்புகளை உங்களுக்கு நான் இங்கே எடுத்துக் கூறுவது மிக மிக பயனுடையதாக இருக்குமென்று கருதுகிறேன். நினைவூட்டுவதுதான் இது. இருந்தாலும் இந்த நினைவு மேலும் நம்மை வளர்ப்பதற்கு, நம்முடைய எண்ணத்தைப் பரவ வைப்பதற்கு நிச்சயமாக உதவுமென்று நான் நம்புகிறேன்.

தகவல் தொழில் நுட்பத்தினைத் தமிழகத்தில் சீரிய முறையில் வளர்ப்பதற்காக 1997 நவம்பர் மாதம் தகவல் தொழில் நுட்பவியல் வளர்ச்சிக்குத் தனிக் கொள்கை இந்த அரசால் வகுக்கப்புட்டது.

அதனைத் தொடர்ந்து, இதிலே ஒரு வேடிக்கை, பொருத்தம் பாருங்கள். கடந்த ஆண்டு இதே நாளில் அதாவது 5.10.1998 அன்று தகவல் தொழில்நுட்பவியல் துறை தமிழக அரசில் உருவாக்கப்பட்டது. இத்துறைக்கு வழிகாட்டத்தக்க வகையில் 8.10.1998 அன்று எனது தலைமையில் அந்நாளைய மத்திய தொழில் துறை அமைச்சர் முரசொலி மாறன் அவர்களைத் துணைத் தலைவராகக் கொண்டு மாநில அளவிலான தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக் குழு (State Level Task Force on Information Technology) ஏற்படுத்தப்பட்டது.

### தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குத் தமிழகத்தில் தீவிர நடவடிக்கைகள்

தமிழ் மென்பொருள் தொழில் மேம்பாடு, பள்ளிகளில் கணினி அறிமுகத்திற்குப் பாடத்திட்டம் உருவாக்குதல், அரசின் அனைத்துத் துறைகளிலும் கணினியைப் பயன்படுத்துதல், ஆகியவற்றிற்கு உதவும் வகையில் அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு துணைக்குழுவும் அமைக்கப்பட்டது. இக்குழுக்களின் சீரிய வழிகாட்டலுடன், தகவல் தொழில்நுட்பத் துறையின் விரைவான வளர்ச்சிக்குப் பல்வேறு தீவிர நடவடிக்கைகள் தமிழகத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கணினிப் பயன்பாடுகளில் உலக அளவில் பொதுவான தமிழ்க் குறியீடுகள் இல்லாததால் தமிழ் மென்பொருள் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. இதைக் கருத்தில் கொண்டுதான் தமிழக அரசு 'தமிழ்நெட் 99' என்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டை 1999 பிப்ரவரித் திங்களில் சென்னையில் நடத்தியது.

அதன் தொடர்ச்சியாகத் தரப்படுத்தப்பட்ட தமிழ் விசைப் பலகை (Standardised Tamil Key Board) தமிழ் வரிவடிவக் குறியீடு ஆகியவைகள் உலகத்தரத்திற்கு ஏற்ப உருவாக்கி வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி (Tamil Software Development Fund) ஏற்படுத்தப்பட்டு, தமிழில் புதிதுபுதிதாக மென்பொருள்களை உருவாக்கிட நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

### தமிழ்மொழியின் செல்வாக்கினை மேம்படுத்த புதிய ஆய்வுப் பணிகள்

இணையத் தமிழ் ஆய்வு மையம் (Centre for Research on Tamil in Internet) ஒன்றும் அமைக்கப்பட்டு, தகவல்

தொழில் நுட்பத்தில் தமிழ் மொழியின் செல்வாக்கினை மேம்படுத்துவதற்குரிய புதிய ஆய்வுப் பணிகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கு மேலும் துணை புரியும் வகையில் அண்ணா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், திருச்சி வட்டார பொறியியல் கல்லூரி ஆகியவைகளில் ஆய்வு இருக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பிறநாடுகளில் வாழும் தமிழர்கள் – இணையத்தின் மூலம் தமிழ் பயில்வதற்கு உதவிட "தமிழ் இணையப் பல்கலைக் கழகம்" அமைத்திடவும் 'தமிழ்நெட் 99' மாநாட்டில் முடிவு செய்யப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆங்கில மொழிக்கு அடுத்தபடியாக இணையத்தில் ஒரு மொழி இடம் பெறுவதற்கு உலகில் – தமிழைத் தவிர வேறு எந்த மொழிக்கும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## நாட்டிலேயே மிகப்பெரிய நிறுவனமாக அமையும் டைடல் பார்க்

தமிழக அரசு வழங்கிவரும் ஊக்கம் காரணமாக சென்னை முதல் கேளம்பாக்கம் வரை செல்லும் பழைய மாமல்லபுரம் சாலை முழுவதிலும் தகவல் தொழில்நுட்பத் தொழில்கள் மிக வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்றன.

டிட்கோ, எல்காட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து 320 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை தரமணியில் உருவாக்கிவரும் 'டைடல் பார்க்' (Tidel Park) – தகவல் தொழில்நுட்பத் தொழில் வளாகம் பாராட்டத்தக்க வகையில் மிக வேகமாக உருவாகி வருகிறது.

10 இலட்சம் சதுர அடி பரப்பில் உலகத் தரத்திற்கு இணையாக உருவாக்கப்பட்டு வரும் இந்த டைடல் பார்க் நிறுவனம், நாட்டிலேயே மிகப் பெரிய நிறுவனமாக அமையும் என்பதை மகிழ்ச்சியோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தகவல் தொழில்நுட்பத்தில் தரமான கல்வி வழங்கிட 70 கோடி ரூபாய் முதலீட்டில் 'டானிடெக்' நிறுவனத்தைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. இந்நிறுவனத்தில் ஓராண்டு முதுகலை பட்டயப் படிப்பை (PG Diploma Course in Information Technology) முடித்துள்ள முதல் தொகுதி மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் தொழில்களில் பெரிதும் வரவேற்கப்பட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். சோழிங்கநல்லூரில் டாட்டா கன்சல்டன்சி நிறுவனம் (Tata Consultancy Services) ஆசியாவின் மிகப் பெரிய மென்பொருள் வளர்ச்சி மையத்தை நிறுவியுள்ளது.

தமிழகத்தில் தமிழ்நாடு அரசும் தகவல் தொழில்நுட்பத் தொழில்களும் அளித்திடும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி – விரைவாக மனித வளங்களைக் கணினி அறிவாற்றலுடன் பெருக்குவதற்குப் புதிய முயற்சியாகத்தான் – தமிழக அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் கல்வியை அறிமுகப்படுத்திடும் திட்டத்தை வகுத்துள்ளது.

1999–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17–ஆம் நாள் 1999–2000–ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையைத் தமிழக சட்டப்பேரவையில் வைத்து நான் உரையாற்றிய பொழுது,

*"பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் அனைவரும் கணினி அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பது அரசின் விருப்பமாகும். நிபுணர்களின் கருத்துகளின் அடிப்படையில் பாட முறையை உருவாக்கி கணினியில் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள் மூலம் கணினிகளை நிறுவி, மாநில முழுவதும் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 11, 12 வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் இந்தக் கல்வியாண்டில் இருந்து தொடங்கப்படும். இதனால் ஒவ்வொரு பள்ளியிலும் சராசரி 40 மாணவர் என்ற அடிப்படையில் மாணவர்கள் ஆண்டுதோறும் மென்பொருள் துறையில் வேலை பெறும் வாய்ப்பிற்குத் தகுதியுடையவர்களாவார்கள்".*

– என்று அறிவித்தேன். அதன்படி தமிழக அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் கல்வித் திட்டம் இன்று மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களால் தொடங்கி வைக்கப்படுகிறது.

## கணினிதான் இனிமேல் கரும்பலகைகளாக மாறும்

சமுதாயத்தின் எல்லா முனைகளிலும் கணினி ஏற்படுத்தி வரும் தாக்கத்தையும், மாற்றத்தையும், தகவல் தொழில் நுட்பம் அடுத்த நூற்றாண்டின் முன்னோடி விஞ்ஞானமாகத் திகழ இருப்பதையும் கருத்தில் கொண்டு எதிர்காலத் தமிழ்ச் சமுதாயம் விஞ்ஞான வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் பின்தங்கிவிடக் கூடாது என்ற தொலை நோக்கோடு இந்த அரிய திட்டம் முதலில் 112 கோடி ரூபாய்ச் செலவில் அரசின் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் 30 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு நான் தெரிவிக்கிறேன்.

தமிழகத்தில் உள்ள எஞ்சியுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி அமைச்சர் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல அடுத்த ஆண்டில் கணினிக் கல்வி தொடங்கப்படும்.

பள்ளிப் பாட நேரத்தைப் பொறுத்து மற்ற வகுப்பு மாணவ மாணவியர்க்கும் கணினித் தொடர்பான அடிப்படைக் கல்வி கற்பிக்கப்படும். இத்திட்டத்தை நமது நாட்டின் பிற மாநிலங்களும் சில வெளிநாடுகளும் ஏற்கெனவே வரவேற்றுள்ளன என்பதையும் தெரிவித்து இதனை மாணவர்களும் ஆசிரியப் பெருமக்களும் பொதுமக்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று. கேட்டு இப்பொழுது சில பள்ளிக்கூடங்களிலே கரும்பலகையே இல்லை, கணினி வேறா என்று யாராவது கேட்கக் கூடும். கணினிதான் இனிமேல் கரும்பலகைகளாக மாறும் என்பதையும் நான் எடுத்துக் கூறி அந்த அளவிற்கு இந்தக் கணினியை நாம் பயன்படுத்த வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டி மேதகு இந்திய குடியரசு துணைத் தலைவர் அவர்களை மீண்டும் ஒருமுறை அன்போடு வரவேற்று இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

*– மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 5–10–99 அன்று 30 ஆயிரம் மாணவர்கள் பயன்பெற 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறி மையங்கள் தொடக்க விழாவில் ஆற்றிய உரை.* ★

# காந்தியடிகளின் கொள்கைகளைப் போற்றும் தமிழ்நாடு அரசு

**– முதலமைச்சர் கலைஞர்**

அமைதியின் சிகரமாக, பொறுமையின் கடலாக, தியாகச்செம்மலாக விளங்கி – மறைந்தும் என்றென்றும் நம் நெஞ்சத்தில் மறையாமல் இருக்கின்ற உத்தமர் காந்தியடிகளுடைய பிறந்த நாள் விழாவில் – அவர் நினைவைப் போற்றவும், அவர் விட்டுச்சென்றுள்ள பணிகளை அட்டியின்றி செய்து முடிக்கவும் உறுதியெடுத்துக் கொள்கின்ற விழாவாக இந்த விழா அமைந்திருக்கின்றது..

அவருக்கு விழாவெடுக்கும் வேளையில் அவருடைய கொள்கைகளை நாம் எந்த அளவிற்குப் பின்பற்றுகிறோம் என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்வதற்கு இந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது என் ஆவலாகும்.

உத்தமர் காந்தியடிகளைப் பொறுத்த வரையில் – அதை இங்கே பேசிய பெருமக்கள் குறிப்பிட்டதைப் போல இந்தியாவிலே எல்லா மாநிலங்களிலும் அவருடையப் புகழைப் பாடினாலும் அவருடையப் பெருமையை எடுத்துச் சொல்கிற விழாக்களை நடத்தினாலும், அவர் நினைவைப் போற்றினாலும்; அவரைப் பாராட்டுவதில் அவருடைய சிறப்பியல்புகளை எடுத்துச் சொல்வதில் தமிழகத்திற்கு ஒரு தனி உரிமை உண்டு, தனிப் பெருமையும் உண்டு.

ஏனென்றால் இந்திய நாட்டின் விடுதலைக்காக அவர் போர்க்கொடி தூக்குவதற்கு முன்பே – அவர் நிறவெறியிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக தென்னாப்பிரிக்காவிலே ஒரு பெரிய போராட்டத்தை நடத்தியவராவார். அந்தப் போராட்டத்தின் போது அவர் பெரிதும் மதித்துப் போற்றிய இந்திய நாட்டு தேசிய இனங்களில் ஒன்று தமிழ் இனம் என்பதை நான் இங்கே மிகுந்த பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய உத்தமர் காந்தியடிகள் இந்தியாவிலே வேறெங்கும் சென்று அங்குள்ள பகுதிகளைக் காண விரும்பியதை விட முதன்முதலாக அவர் விரும்பியது– தமிழகத்திலே, அதிலும் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலே தில்லையாடி வள்ளியம்மாள் பிறந்த அந்த ஊரைத்தான் காண வேண்டுமென்கிற அந்த உணர்வோடு அந்த ஊருக்கு வந்தார். தில்லையாடி வள்ளியம்மாளின் பூர்வீக உறவினர்கள் பெற்றோர், உற்றார் ஆகியோர் வாழ்ந்த அந்த இடங்களையெல்லாம் பார்த்தார்.

தென்னாப்பிரிக்கா போராட்டத்தில் ஈடுபட்ட நாகப்பன், நாராயணசாமி என்கிற இரண்டு ஆதி திராவிடப் பெருமக்கள் தில்லையாடி வள்ளியம்மாளின் உறவினர்கள் இல்லங்களுக்கெல்லாம் சென்று அவர்களையெல்லாம் நலம் விசாரித்தார். அவர்களுக்கெல்லாம் வாழ்த்துக் கூறினார். அந்த அளவிற்குத் தமிழகத்தின்பால், தமிழர்களின்பால் உத்தமர் காந்தியடிகள் பெரும் விருப்பத்தை உடையவராக இருந்தார் என்பதற்கு இன்னும் சில ஆதாரங்களை நான் உங்கள் முன் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அவர் தென்னாப்பிரிக்காவில் நடத்திய ஒரு பத்திரிக்கையின் பெயர் Indian Opinion என்பதாகும். அந்தப் பத்திரிகையில் **5.6.1909** அன்று காந்தியடிகள் தமிழர்களைக் குறித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையிலே அவர் குறிப்பிடுகிறார்...

``What the Tamils have done in the struggle, no other Indian community has done"

தென்னாப்பிரிக்க சத்தியாகிரகப் போராட்டத்தில் தமிழர்கள் மேற்கொண்ட பங்கிற்கு ஈடு இணையாக வேறு எந்த இந்தியரையும் என்னால் குறிப்பிட முடியாது என்று குறிப்பிடுகிறார். மேலும்,

``So I thought that if for no other reason than to show my sincere gratefulness to them, I shall seriously read their books. So I spent the last month attentively studying their language"



*அண்ணல் காந்தியடிகள் 131ஆவது பிறந்த நாள் விழா, சென்னை காந்தி மண்டபத்தில் நடைபெற்றது. அது சமயம் கல்லூரி மாணவர்களுக்கு மேதகு தமிழ்நாடு ஆளுநர் நீதிபதி மீ.பாத்திமா பீவி அவர்களும், பள்ளி மாணவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் சுழற்கேடயம் வழங்கினார்கள். உடன் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு.வ.முல்லைவேந்தன் அவர்கள் உள்ளார்கள்.*

(அதனால் தான் தமிழை நன்றாகக் கற்று தமிழர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டுமென்று என்மனம் விரும்புகிறது. சென்ற ஒருமாதக் காலமாகவே நான் தமிழை மிகுந்த அக்கறையுடன் கற்று வருகிறேன்) மேலும்கூறுகிறார்,

``The more I studied the more I felt its beauties"

(எவ்வளவுக்கெவ்வளவு ஆழ்ந்து அந்த மொழியைப் பயில்கிறேனோ அவ்வளவுக்கவ்வளவு அந்த மொழியின்அழகை உணருகிறேன்)

``It is an interesting and sweet language, and from what I read, I saw that the Tamils had in their midst, in the past and even now, many intelligent, clever and wise persons"

(மிக நேர்த்தியான, இனிமையான மொழி, தமிழ் மொழி. தமிழர்களில் சிறந்த சிந்தனையாளர்களும் மேதைகளும் அன்றும் இருந்தார்கள், இன்றும் நிறைய பேர் இருக்கிறார்கள்) மேலும் காந்தியடிகள் எழுதுகிறார்...

``Again, if there is to be one Nation in India, those who live outside the Madras Presidency, must know Tamil"

இதுதான் மிகவும் முக்கியமானது. இந்தியா முழுவதும் ஒருமைப்பாட்டை அடைய வேண்டுமென்றால், சென்னை மாகாணத்திற்கு (சென்னை மாகாணம் என்பது முன்பிருந்த பெயர்) தமிழ்நாட்டிற்கு வெளியே இருப்பவர்களும் தமிழ் மொழியை விரும்பிக் கற்கவேண்டும்.

**தமிழ் மத்திய ஆட்சி மொழியாக அன்றைக்கே காந்தியடிகள் அடித்தளம் அமைத்தார்.**

இதைத் தான் இன்றைக்கு நாம் சொல்கிறோம். எல்லாக்கட்சிகளும் சொல்கிறார்கள். இந்தியாவின் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழும் ஆகவேண்டும் என்பதற்கு உத்தமர் காந்தியடிகள் அன்றைக்கே 1909–ஆம் ஆண்டிலேயே, அதாவது 90 ஆண்டுகளுக்குமுன்பே நமக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்திருக்கிறார். காந்தியடிகள் தென்னாப்பிரிக் காவிலிருந்து முழங்கிய அந்த முழக்கத்தைத்தான் செயல்படுத்துவதற்குத் தமிழகத்திலே உள்ள தமிழ் மொழியின் மீது ஆர்வமும் அன்பும் பற்றும் பாசமும் கொண்ட கட்சிகள் மாத்திரமல்ல, இந்தியாவின் ஒற்றுமைக்கு இதுதான் துணையாக, இருக்க முடியுமென்று எண்ணுகின்ற அத்தனை பேரும், இந்தியா முழு ஒருமைப்பாட்டை அடைய வேண்டுமென்றால் சென்னை மாகாணத்திற்கு, அதாவது தமிழகத்திற்கு வெளியே உள்ளவர்களும் தமிழ் மொழியை விரும்பிக் கற்க வேண்டும் என்கின்ற அந்த எண்ணத்தை ஈடேற்றுவதற்காகத்தான் நாம் அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம்.

## கதர் இயக்கத்திற்கு வலிமை சேர்த்த பெரியார்

இங்கே பேசிய பெருமக்கள் கதரைப்பற்றி குறிப்பிட்டார்கள். குறிப்பாக பெரியவர் திரு.ராகவலு அவர்கள் பேசும் போது, தென்னக மாநிலங்களில் தமிழ்நாட்டிலே தான் காந்தியடிகளுடைய கொள்கையை நிறைவேற்றுகின்ற வகையில் கதருக்கான அதிக ஆதரவை இந்த அரசு தான் தந்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். அது மாத்திரமல்ல, எங்களுடைய ஆரம்ப இடமான ஈரோடு தந்த வள்ளல் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தமிழகத்திலே விடுதலைப் போராட்டத்திற்குத் தளகர்த்தராக நின்று காந்தி அடிகளோடு ஒத்துழைத்தவர் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். மன்னிக்க வேண்டும் – நீங்கள் எல்லாம் அறிவீர்கள் என்று சொல்வதற்காக இளைஞர்களாக உள்ள பலர் அறியமாட்டீர்கள். ஆகவே தான் சொல்கிறேன். காந்தியடிகளுடைய இயக்கத்தில் தந்தை பெரியார் அவர்கள் ஒருங்கிணைந்து நின்று விடுதலைப் போராட்டத்தை நடத்தியவர். அந்தக் காலத்திலே விடுதலைப் போருக்குத் துணையாக கதர் இயக்கமும் நின்றது. அந்தக் கதர் இயக்கத்திற்கு எந்த அளவு தந்தை பெரியார் பாடுபட்டார் என்பதை நான் சொன்னால் நீங்கள் நம்புவீர்களோ இல்லையோ, பிரபல எழுத்தாளர் வ.ரா.அவர்கள் 'காந்தி' பத்திரிகையில் 1933–ஆம் ஆண்டு எழுதிய கட்டுரையிலே குறிப்பிடுகிறார்.

"ஈ.வெ.ரா. கதர் வளர்ச்சிக்காக ராட்டினத்தைத் தூக்கிக் கொண்டு ஊர் ஊராகச் சுற்றி வந்தார். கதர் துணிகளைத்தோளின் மீது போட்டுக்கொண்டு விற்றார். தமிழ்நாட்டில் இன்று கதர் துணி உடுத்துபவர்களில் பெரும்பாலோர் ஈ.வெ.ரா.வின் சொற்பொழிவைக் கேட்டு கதர் அணிந்தவர்கள்" என்று குறிப்பிட்டார்.

அந்த அளவிற்குக் கதர் இயக்கத்திற்கு வலிமை சேர்த்த பெரியார் அவர்கள் தொடர்ந்து அந்த இயக்கத்திலே இல்லை என்றாலும்கூட, இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்திற்கு வித்தூன்றியவர்களில் ஒருவராக இருந்ததற்கும், உத்தமர் காந்தி அடிகளுடைய ஒரு பெரும் நம்பிக்கைக்குரிய தளகர்த்தராக தமிழகத்திலே வாழ்ந்தார் என்பதற்கும் இவைகள் எல்லாம் நல்ல எடுத்துக்காட்டுகள்.

### தீண்டாமை

காந்தியடிகளுடைய பெரும் விருப்பம் தீண்டாமை என்ற கொடுமை அகற்றப்பட வேண்டும் என்பதுதான். அதற்கு அவர் சொல்கிறார்... "சட்டத்தின் சக்தியினால் மட்டும் தீண்டாமையை அகற்றிவிட முடியாது. தீண்டாமை, கடவுளுக்கும் மனிதருக்கும் விரோதமான குற்றம் என்பதை உணர்ந்து அதற்காகப் பெரும்பாலான இந்துக்கள் வெட்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் தீண்டாமையை ஒழிக்க முடியும்" என்று காந்தியடிகள் குறிப்பிட்டிருக்கிறார். மேலும்சொல்கிறார், "தாழ்த்தப்பட்ட மக்களின் இன்றைய பசி என்ன?" என்ற ஒரு கேள்வியைக்கேட்டுவிட்டு... காந்தியடிகள் அதற்கு விடை அளிக்கிறார். "தன்மானமும், சம அந்தஸ்தும் வாய்ந்த பிரஜைகளாகக் கண்ணியமுடன், வாழ்வது, மனிதப் பிறவிகளுக்குரிய நீதிகளைப் பெறுவது, அச்சத்திலிருந்து விடுதலை, சுகாதாரமான பழக்க வழக்கங்களைக் கைகொள்வது, சிக்கனம், சுறுசுறுப்பு, கல்வி ஆகியவைகள் தான் தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மையான இன்றைய பசியாகும். தீண்டாமை ஒரு பயங்கரமான அசத்தியம், தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை நான் தொடங்கியிருப்பதின் நோக்கமே தெள்ளத் தெளிவானது" என்று குறிப்பிட்டுவிட்டு காந்தியடிகள் மேலும் கூறுகிறார், "தீண்டத்தகாதவர் ஒருவரை ஒவ்வொரு இந்துவும் தீண்ட வேண்டும் என்பது என் நோக்கம் அல்ல. தீண்டத்தக்க ஒவ்வொரு இந்துவும் தம்முடைய இதயத்திலிருந்து தீண்டாமையை விரட்ட வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம்" என்று உத்தமர் காந்தியடிகள் பலமுறை உரைத்திருக்கிறார்.

### காந்தியடிகளின் கொள்கைகளைப் போற்றி வரும் அரசு

அத்தகைய காந்தியடிகளுடைய கொள்கைகளைப் போற்றி வருகின்ற அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதற்குச் சில எடுத்துகாட்டுகளை இங்கே செய்தித்துறை அமைச்சர் முல்லைவேந்தன் எடுத்துக் காட்டினார். நான் அவைகளையெல்லாம் விரிவாக மீண்டும் மீண்டும் எடுத்துக்கூற கருதவில்லை. ஆனால் ஒன்று – காந்தியடிகள் கலப்புத் திருமணத்தை வெகுவாக ஆதரித்தார். அதற்கேற்ப இந்த அரசு 1989–ஆம்ஆண்டு கலப்புத் திருமணத் திட்டம் என்றதொரு திட்டத்தைக்கொண்டு வந்து – கலப்புத் திருமணம் என்றால் செட்டியாருக்கும் முதலியாருக்கும் நடைபெறுகின்ற திருமணம் அல்ல. அய்யருக்கும், அய்யங்காருக்கும் நடைபெறுகின்ற திருமணம் அல்ல, கலப்புத்திருமணம் என்றால், உண்மையிலேயே மணமகனோ மணமகளோ இருவரில் ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். அதுதான் கலப்புத் திருமணம் என்ற அடிப்படையில் இந்த அரசு கலப்புத் திருமணம் செய்து கொள்கிற தம்பதிகளுக்கு 89–ஆம்ஆண்டு 5000 ரூபாய் நிதி வழங்கப்படுமென்று அறிவித்தது. பிறகு 96–ஆம் ஆண்டு 5000 ரூபாயை 10,000 ரூபாய் என்று உயர்த்தி அறிவித்தது. இப்போது 97–ஆம் ஆண்டு அந்த மணமக்களில் இருவரில் ஒருவர் ஆதிதிராவிடராக இருந்தால் அந்த மணமக்களுக்கு 20,000 ரூபாய் நிதி உதவியாக வழங்கப்படுமென்று அறிவித்து அதை செயற்படுத்தி வருகின்றது இந்த அரசு.

### கணினி மூலமாக இளைஞர்களுக்கு விஞ்ஞானப் புதுமையை உருவாக்க முயற்சி

மேலும் ஒரு நற்செய்தியை இங்கே சொல்ல விரும்புகிறேன். இங்கே குறிப்பிட்டதைப் போல, விஞ்ஞானம் வளர்ந்து வருகின்ற இந்தக் காலக்கட்டத்தில், விஞ்ஞான யுகமாக 21–ஆம் நூற்றாண்டு மிளிரப் போகின்றது என்று நாம் எல்லாம் எதிர்பார்க்கின்ற இந்தக் காலக்கட்டத்தில் இளைஞர்களுக்குக் கணினி மூலமாக ஒரு விஞ்ஞானப்

புதுமையை உருவாக்க இந்த அரசு முயற்சித்து, 5–10–99ஆம் தேதியன்று தமிழகம் முழுவதும் உள்ள 600–க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் கணினியை ஒரு பாடமாக ஆங்காங்குப் பயிற்சி அளிக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றது.

இந்த முயற்சியைத் தொடர்ந்து நம்முடைய மரியாதைக்கும் மதிப்பிற்கும் உரிய சி.சுப்பிரமணியம் அவர்கள் எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார்கள். அதில் பாரதீய வித்யா பவன் காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை சி.டி.ரோம் கேசட்டில் தயாரித்திருக்கிறது. அதன் பெயர் Gandhiji-Apostle of Peace and Non-Violence இது சுமார் நான்கரை மணி நேரம் கம்ப்யூட்டரில் ஓடக்கூடிய காந்தியடிகளின் வரலாறாகும். காந்தியடிகள் நடத்திய போராட்டங்கள், அவர் நடத்திய உண்ணாவிரதங்கள், அவர் ஈடுபட்ட சத்தியாகிரகங்கள், அவர் கலந்துகொண்ட பேச்சுவார்த்தைகள், வட்டமேஜை மாநாடுகள் போன்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் இடம் பெற்றிருக்கின்ற கம்ப்யூட்டரில் ஓடக்கூடிய காந்தியடிகளின் படமாகும்.

இங்கே நம்முடைய நீதிபதி இஸ்மாயில் அவர்கள் பேசும்போது, மற்றவர்கள் சொல்வதைக் காதிலே வாங்கிக் கொண்டு, இரண்டு காதுகள் இருக்கின்ற காரணத்தினால், ஒரு காதால் வாங்கிக்கொண்டு மற்றொரு காதால் அதை வெளியிடுகின்ற பழக்கம் இல்லாமல் அதனைச் செய்து முடிக்கின்றவர் என்று என்னைப் பாராட்டினார்களே, அதற்கேற்ப சி. சுப்ரமணியம் அவர்களுடைய அந்த அன்புக் கோரிக்கையை ஏற்று இப்பொழுது அந்தக் கம்ப்யூட்டர் பயிற்சிக்கு முதற் கட்டமாக 250 பள்ளிகளில் அந்தக் கேசட்டைப் பயன்படுத்த முடிவெடுத்து அதை ரூ.3 இலட்சத்து 51 ஆயிரத்து 750 செலவிலே அவைகளை வெளியிடுவதற்குத் தமிழக அரசு ஆணை வெளியிடப்பட்டிருக்கின்றது என்ற நல்ல செய்தியையும் இந்த விழாவிலே அறிவித்து – அதை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், மாணவர்கள் பயன்படுத்துகின்ற அளவிற்கு ஆசிரியப் பெருமக்கள் துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த இனிய விழாவிலே உங்களையெல்லாம் சந்திக்கின்ற



*காந்தியடிகளின் 131ஆவது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு காந்தி மண்டபத்தில் செய்தி–மக்கள் தொடர்புத்துறை அமைத்த கண்காட்சியினை 2–10–1999 அன்று தலைமைச் செயலாளர் திரு.ஏ.பி. முத்துசாமி, இ.ஆ.ப., திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் செய்தித்துறை செயலர் திரு.என்.இராஜரெத்தினம்,இ.ஆ.ப., மற்றும் செய்தித்துறை இயக்குநர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.*

அதன் நகல் ஒன்றை எனக்கு கடந்த 5–ஆம் தேதியன்று சி.சுப்ரமணியம் அவர்கள் அனுப்பி வைத்து "இந்தக் கேசட்டை நீங்கள் போட்டுப் பார்த்துவிட்டு – தமிழக அரசு கணினி பாடத்தை அறிமுகப்படுத்தவிருக்கின்ற பள்ளிகளில் எல்லாம் இதைப் பயன்படுத்த முடியுமா என்று பாருங்கள்" என்று எழுதியிருந்தார்கள். அதை நான் போட்டுப் பார்த்தேன்.

நல்ல வாய்ப்பு கிட்டியமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*– தமிழ்நாடு அரசின் சாா்பில் 2–10–99 அன்று நடைபெற்ற அண்ணல் காந்தியடிகளின் 131ஆவது பிறந்த நாள் விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.* ★



கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்ற காலத்தில் தான் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்டது. எஞ்சிய காலங்களில் அரசு அலுவலர்களால் நிர்வாகம் நடத்தப்பட்டது. முந்தைய ஆட்சியில் கூட்டுறவுத்துறை நலிவுற்றிருந்தது. உதாரணத்திற்கு அரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு 95-96-ஆம் ஆண்டில் ரூ.2,47,000 நட்டம் ஏற்பட்டது. பின்னர் 1996-97-இல் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் பொறுப்புடன் செயல்பட்டு இழப்புகள் தகர்க்கப்பட்டு நட்டம் ரூ.10,347 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் லாபம் ஈட்டத் தொடங்கும்.

# தருமபுரி மாவட்டத்தில் 2,269 மகளிருக்கு சிறுவணிகக் கடன்

– மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்

**வ. முல்லைவேந்தன்**

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, கூட்டுறவே நாட்டுயர்வு என்ற சிந்தனைக்கு உயிர்கொடுத்து கூட்டுறவுத்துறை மேன்மையுறச் செய்தது இந்த அரசுதான். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்தே பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பட்டணத்தில் இருந்து பட்டிக்காடு வரை கூட்டுறவு இயக்கம் வளர்க்கப்பட்டு வந்துள்ளது.

கடந்த காலத்தில் ரூ.45 இலட்சம் நகைக் கடன் வழங்கப்பட்டது. தற்பொழுது ரூ.90 இலட்சம் வழங்கப்படுகிறது. அதுபோல் வைப்பு நிதியும் ரூ.53 இலட்சத்திலிருந்து 110 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு இதுவரை அனைத்து இனங்களிலும் ரூ.206 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.



வைப்பு நிதியாகப் பெறப்படும் தொகை பொது மக்களுக்கு நகைக்கடன், தொழில் கடன் போன்ற கடன்களாக மக்களுக்கு வழங்கப்படுவதின் மூலம் நாட்டில் வேலையில்லாத திண்டாட்டத்தை ஒழிக்க கூட்டுறவுத்துறை உதவுகிறது என்பதில் ஐயமில்லை. கடந்த மூன்று ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் 7 மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் துவக்கப்பட்டுள்ளன. மொரப்பூர் பேரிகை ஆகிய ஊர்களில் கட்டடப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. பையர்நத்தம், கம்பைநல்லூர் ஆகிய ஊர்களில் தலா ரூ.12 இலட்சம் மதிப்பில் பணிகள் துவக்கப்படவுள்ளன. மாவட்டத்தில் ஐந்து வங்கிகளில் ரூ.10 இலட்சம் மதிப்பில் நவீன வங்கிக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வங்கிகளுக்கு கம்ப்யூட்டர் வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது.



24 வங்கிகளுக்கு மட்டும் நிலம் இல்லாத காரணத்தினால் கிடங்குகள் கட்டப்படாமல் உள்ளன. மாவட்டத்தில் மொத்தம் 37 மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள் உள்ளன. கழக ஆட்சியில் மட்டும் 2 வங்கிகளுக்கு மொரப்பூர், பேரிகை, கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது. பையர்நத்தம் மற்றும் கம்பைநல்லூர் கிளைகளுக்குக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. புதியதாகத் துவக்கப்பட்ட 7 வங்கிக் கிளைகள் சிங்காரப்பேட்டை, தொப்பூர், கம்பைநல்லூர், வேப்பனப்பள்ளி, பாகலூரர் சூளகிரி, பையர்நத்தம் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகிறது. விரைவில் அரசம்பட்டி, ஆலப்பட்டி மத்தூர் ஆகிய ஊர்களில் புதிய வங்கிக் கிளைகள் திறக்கப்படவுள்ளன. ஏற்கெனவே 4 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் பட்டுகோணம்பட்டி, மோளையானூர், ஆலாபுரம், ஆனந்தூர் ஆகிய இடங்களில் துவக்கப்பட்டுள்ளது.

மகளிர் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு தொடங்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சிறுதொழில் செய்ய 2,269 மகளிருக்கு இதுவரை ரூ.11.41 இலட்சம் கடன் வழங்கப் பட்டுள்ளது.



தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தமிழ் நாட்டிலேயே சிறந்த வங்கியாகத் தேர்வு செய்யப் பட்டுள்ளது பெருமைக்குரிய ஒன்றாகும். தொடர்ந்து இந்த பெருமையை தக்க வைத்துக் கொள்ள மேலும் சிறப்பாக கூட்டுறவுத் துறை ஊழியர்கள் செயலாற்ற வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மொத்தம் 250 உள்ளன. கலைஞர் அரசு பொறுப்பேற்ற பிறகு 61 வங்கிகளுக்கு நிலம் வாங்கி கட்டடம் கட்டப்பட்டுள்ளது. 165 வங்கிகளுக்கு ஏற்கெனவே உள்ள கிடங்கு வசதி போதாமல் மேலும் கூடுதலாகக் கிடங்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

**"கூட்டுறவுத் துறையில் அங்கம் வகிக்கும் அனைவரையும் நான் தூய்மையான வெள்ளைத் துணியாகவே கருதுகிறேன்; ஒரு துளி மையும் மேலே சிந்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அப்படிப் பார்த்துக்கொண்டால், இந்தச் சமுதாயத்தைச் சிந்தாமல் சிதறாமல் காப்பாற்றினோம் என்ற பெருமை நமக்கெல்லாம் வாய்க்கும்!"**

**– கலைஞர்**



# பாரதிதாசன் பரம்பரை

- சாமி பழனியப்பன்

தமிழ் இதழியல் உலகில் 'பொன்னிக் காலம்' என்று ஒன்றுண்டு. இதழியல் வரலாற்றிலும் திராவிட இயக்க வரலாற்றிலும் அதற்குச் சிறப்பான இடம் உள்ளது. பொன்னிக் காலம் என்பதை 1947–ஆம் ஆண்டு முதல் 1953–ஆம் ஆண்டுவரை என்று கொள்ளலாம்.

திராவிட இயக்க இதழ்கள் பலவும் அழகியல் பற்றிக் கவலைப்படாமல், கொள்கை ஏடாக – வெறும் பிரச்சார ஏடுகளாகவே மலர்ந்தன. அப்போது 1947 சனவரித் திங்கள் முருகு சுப்பிரமணியம் அவர்களை ஆசிரியராய்க் கொண்டு புதுக்கோட்டை செந்தமிழ்ப் பதிப்பகத்திலிருந்து கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் எல்லாரும் வியந்து, பாராட்டும் வண்ணம் 'பொன்னி'யின் முதல் இதழ் வெளிவந்தது.

அந்தக் காலத்தில் கவிதை உலகில் தன்மான இயக்கத்தின் தனிப்பெரும் கவிஞராக – சுயமரியாதைக் கொள்கைச் சிங்கமாக விளங்கிய பாவேந்தர் பாரதிதாசனுக்கு அவ்வளவு செல்வாக்கில்லை. கிடைக்க வேண்டிய அளவிற்கு விளம்பரமும் கிடைக்கவில்லை. 'குடி அரசு', 'பகுத்தறிவு', 'விடுதலை', 'திராவிட நாடு' போன்ற இயக்க இதழ்கள் மட்டுமே பாரதிதாசன் கவிதைகளை வெளியிட்டன. தன்மான இயக்கக் கொள்கைகளைப் பாடிய இளங்கவிஞர்களுக்கும் அப்படியே தான்.

முருகு சுப்பிரமணியம் அவர்கள் சிறந்த முருகபக்தராக – தெய்வ பக்தராக இருந்தாலும் பாரதிதாசனிடத்தும், அவரது கவிதைகளிடத்தும், தந்தை பெரியாரிடத்தும் பெரும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். பாரதிதாசன் கவிதைகள் நாட்டு மக்களிடத்தே பரவ வேண்டும் என்ற பெரு வேட்கையுடையவராகவும் இருந்தார்.

எனவே, 'பொன்னி' முதல் இதழிலேயே பாரதிதாசனிடத்து ஒரு கவிதை எழுதி வாங்கி வெளியிட்டார். இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் திருமதி. குஞ்சிதம் குருசாமி அவர்கள் 'பாரதிதாசன் கவிதைகள்' என்னும் தொகுப்பினை வெளியிட்டுப் பரப்பினார்கள். அப்போது திராவிட இயக்க இதழ்களில் வெளிவந்த பாரதிதாசன் கவிதைகளிலும் நாம் மேலே கூறிய கவிதைத் தொகுதியிலும் ஈடுபாடு கொண்ட இளைஞர்கள் பலர் பாரதிதாசனைப் பின்பற்றிக் கவிதைகள் எழுத ஆரம்பித்தார்கள். இவர்களில் பலர் பாரதிதாசன் பரம்பரையாக வளர்ந்தார்கள்.

பாரதி தாம் வாழ்ந்த காலத்தில் கவிஞராக விளங்கிய பாரதிதாசனை அறிமுகப்படுத்தும் போது, தமது கவிதா மண்டலத்தில், 'பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனகசுப்புரத்தினம்' என்று அங்கீகாரம் கொடுத்து பாரதிதாசன் கவிதையை வெளியிட்டார். பாரதியிடத்து மிகுந்த ஈடுபாடும், நட்பும் கொண்ட கனகசுப்புரத்தினம், பின்னர் தனது பெயரை 'பாரதிதாசன்' என்றே மாற்றிக் கொண்டார். பாரதிதாசன் கனகசுப்புரத்தினமாக இருக்கும் போது, 'முருகன் துதியமுது' முதலிய பக்திப் பாடல்களையும், தேசபக்திப் பாடல்களையும் பாடினார். பாரதிதாசனாக

மாறிய பிறகு தேசீயப் பாடல்களையும் கதர் இராட்டினப் பாடல்களையும் பகுத்தறிவு இயக்கப் பாடல்களையும் எழுதினார்.

பின்னர் பாரதிதாசனுக்குத் தந்தை பெரியாரின் அறிமுகமும், தொடர்பும் கிடைத்தது. அதன்பிறகு அவர் சுயமரியாதைக் கொள்கைகளைப் பாடும் பகுத்தறிவுச் சிங்கமானார்.

பாரதியும், பாரதிதாசனும் கவிஞர்களாக வாழ்ந்த காலத்தில் தான் தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, ச.து.சு.யோகியார் ஆகிய கவிஞர்களும் வாழ்ந்தார்கள். ஆனாலும், கனகசுப்புரத்தினம் மட்டுமே பாரதியிடத்து மிக்க ஈடுபாடு கொண்டு தன் பெயரையே 'பாரதிதாசன்' என்று மாற்றிக் கொண்டார். அதுமட்டுமல்ல, பாரதிக்குச் சரியான பரம்பரை என்று கருதத்தக்கவரும் ஆனார்.

'பாரதி இந்த நாட்டுக்கு வைத்துவிட்டுப்போன சொத்து மூன்று. அவை: ஒன்று 'பாஞ்சாலி சபதம்', இரண்டு 'குயில் பாட்டு', மூன்று 'பாரதிதாசன்' என்று உரத்த குரலில் சொன்னார் எழுத்துலக சாம்ராட் 'புதுமைப்பித்தன்'.

பாரதி மீது 'பாரதிதாசன்' ஈடுபாடு கொண்டதுபோல, பாரதிதாசனிடத்து ஈடுபாடு கொண்ட 'ராஜகோபாலன்' என்ற இளங்கவிஞரும் தனது பெயரை 'சுரதா' என்று மாற்றிக்கொண்டார். 'சுப்புரத்தினதாசன்' என்ற பெயரின் சுருக்கமே 'சுரதா' என்பது.

இவ்வாறு, பாரதிதாசனிடத்து ஈடுபாடுகொண்ட இளங்கவிஞர்களை — இளங்கவிஞர் பட்டாளத்தை 'பொன்னி' இதழில் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்த விரும்பினார் முருகு சுப்பிரமணியம். அடுத்த 'பொன்னி' இதழிலேயே அவரது எண்ணம் செயலாக மலர்ந்தது. ஒவ்வோரிதழிலும் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தினார். அந்த வரிசையில் 47 இளங்கவிஞர்களை அறிமுகப்படுத்தினார். அன்று குடத்திலிட்ட விளக்காக இருந்த இளங்கவிஞர்கள் பலர் பிறகு வளர்ந்த கவிஞர்களாகவும் வேறுபல துறைகளில் புகழ் பெற்றவர்களாகவும் குன்று மேல் ஏற்றிய விளக்குகளாக விளங்குகின்றனர்.

எடுத்துக்காட்டாக மு.அண்ணாமலை, நாரா. நாச்சியப்பன், சுரதா, முடியரசன், வாணிதாசன், சாமி பழனியப்பன், வா.செ.குலோத்துங்கன், கி.மனோகரன் முதலிய அன்றைய இளைஞர்களைக் குறிப்பிடலாம்.

**மு.அண்ணாமலை**

இவர் செட்டிநாட்டில் உள்ள கொத்தமங்கலம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் பள்ளி இறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போது, நானும் பள்ளி இறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஆத்தங்குடியைச் சேர்ந்த நாரா.நாச்சியப்பன் என்பவரும் பள்ளியிறுதி வகுப்பு மாணவர். அன்றைய இளங்கவிஞர்களாக அறிமுகமாகியிருந்த நாங்கள் மூவரும் கண்டனூர் கிட்டான்ஆச்சி நினைவுப் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழா பேச்சுப் போட்டியில் அவரவர் பள்ளியின் சார்பில் கலந்து கொண்டோம். அதில் முதல் பரிசு அந்தக் கல்லூரி மாணவருக்கே கிடைத்தது. இரண்டாவது பரிசு எனக்குக் கிடைத்தது. பின்னர் திரு.அண்ணாமலை, கல்லூரிப் படிப்புக்குச் சென்றுவிட்டார்; திரு.நாரா.நாச்சியப்பன், திருச்சி தேசீயக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். நான் அதே ஆண்டில் கொழும்பு 'வீரகேசரி' நாளிதழின் துணை ஆசிரியராகப் பணியமர்த்தப்பட்டேன்.

அப்போதுதான் 1947–ல் 'பொன்னி' இரண்டாம் இதழில் 'பாரதிதாசன் பரம்பரை' தொடங்கியது. 'காவிரி' என்ற தலைப்பில் அவரது பாடல் வெளியாயிற்று.

பின்னர் இவர் தொடர்ந்து படித்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். 'தாமரைக்குமரி' முதலிய கவிதை நூல்களையும் பல இலக்கிய விமர்சன நூல்களையும் எழுதிச் சிறந்த தமிழ்த் தொண்டாற்றியுள்ளார்.

**நாரா.நாச்சியப்பன்**

இவர் தேசீயக் கல்லூரி மாணவராக இருக்கும் போது இவரது 'மழை' என்னும் கவிதையைப் 'பொன்னி' 1947 மார்ச் இதழில் வெளியிட்டு இவரை 'பாரதிதாசன்' பரம்பரையென அறிமுகப் படுத்தியது. பின்னர் இவர்; 'சென்னை'வாசியாகி 'நாவலர் அச்சகம்' என்ற பெயரில் ஓர் அச்சகத்தைத் தொடங்கி நடத்தி வருகிறார். 'ஈரோட்டுத் தாத்தா' முதலிய பல நூல்களை எழுதியும், 'இளந்தமிழன்' என்ற திங்கள் இதழைத் தொடங்கியும் சிறந்த தமிழ்த் தொண்டாற்றி வருகிறார். 'தமிழக அரசு' 1990–ல் இவருக்குப் பாவேந்தர் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

### சுரதா

இளைஞர் ராஜகோபாலன், சிக்கல் பழையனூரைச் சேர்ந்தவர். இவர் பாரதிதாசனிடத்துப் பெரும் ஈடுபாடு கொண்டு தனது பெயரையே பின்னர் 'சுரதா' என்று மாற்றிக் கொண்டார். சுப்புரத்தினதாசன் என்ற பெயரின் சுருக்கமே 'சுரதா' என்பது. இவர் எழுதிய 'சொல்லடா' என்ற பாடலைப் 'பொன்னி' 1947 ஏப்ரல் இதழில் வெளியிட்டுப் பாரதிதாசன் பரம்பரையாக இவரை அறிமுகப் படுத்தியது.

இவரது முதல் கவிதை நூலான 'சாவின் முத்தம்' என்பதைச் சிறந்த தமிழ் ஆங்கிலக் கட்டுரையாளரும், சிறந்த விமர்சகருமான வீ.ஆர்.எம்.செட்டியார் வெளியிட்டார். இவரது கவிதைகளில் ஈடுபாடு கொண்ட தமிழுலகம் இவரை 'உவமைக் கவிஞர்' என்று பாராட்டியது. அதன் மூலம் இவர் உவமைக்கவிஞர் சுரதா என்றானார். இவரது 'தேன்மழை' என்ற கவிதைத் தொகுப்பு தமிழ்த்தாய்க்கு இவர் அளித்த சிறந்த அணிகலன். இவர், காவியம், இலக்கியம், ஊர்வலம், சுரதா போன்ற பல்வேறு கவிதை இதழ்களை நடத்தி ஏராளமான கவிஞர்களை வளர்த்து, ஊக்கப்படுத்தியுள்ளார். இவர், கவிஞர்களின் வேடந்தாங்கலாக விளங்குபவர். இவருக்கு 1978-ல் தமிழக அரசு முதலாவதாகப் பாவேந்தர் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

### முடியரசன்

துரைராஜ் என்ற பெயரைத் தமிழ் மொழியின் பால் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக முடியரசன் என்று மாற்றிக் கொண்ட இவரும் நானும் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் நாங்கள் ஒரு சாலை மாணக்கராக விளங்கியவர்கள். இளமை முதற்கொண்டே தமிழ்ப்பற்றும், தன்மான இயக்கப் பற்றும் கொண்டவர். 'இசைப்பாடல்கள்' எழுதுவதில் தேர்ந்தவர். இவர் எழுதிய 'நிலவு' என்ற பாடலை 1947 ஜூலை 'பொன்னி' இதழ் வெளியிட்டு இவரை பாரதிதாசன் பரம்பரையாக அறிமுகப்படுத்தியது. பின்னர்



இவர் தமிழாசிரியராகி, இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டுப் பணி இழந்தார். மீண்டும் காரைக்குடி எஸ்எம்எஸ்உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பொறுப்பேற்று சிறந்த தொண்டாற்றினார். இவரது, 'முடியரசன் கவிதைகள்' என்னும் கவிதைத் தொகுப்புகளும், 'காவியப்பாவை' என்னும் காவியத்தொகுப்பும் தன்மான இயக்கத்திற்கும், தமிழ் உலகத்திற்கும் புகழ் சேர்ப்பன. இவருக்குத் தமிழக அரசு 1987-ல் பாவேந்தர் விருது வழங்கிச் சிறப்பித்தது.

### வாணிதாசன்

இவர்தம் இயற்பெயர் ரெங்கசாமி. இவர் புதுச்சேரியைச் சேர்ந்தவர். அப்போது பாகூரில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இவர் எழுதிய 'கதிரோன் வருகை' என்ற பாடலை 1947 செப்டம்பர் பொன்னி இதழ் வெளியிட்டு பாரதிதாசன் பரம்பரையாக அறிமுகப்படுத்தியது. இவர், பாரதிதாசனிடத்து ஒரு மாணவராகவே நெருங்கிப் பழகியவர். அவரிடத்து மிக்க ஈடுபாடு கொண்டவர். கற்பனை அழகும், சொல்வளமும் இவரது கவிதைகள் விஞ்சி நிற்கும். 'தமிழச்சி', 'கொடிமுல்லை', 'எழிலோவியம்' முதலிய பல்வேறு அரிய நூல்களை எழுதித் தமிழ்த் தொண்டாற்றியுள்ளார். இவரைத் 'தமிழ்நாட்டின் தாகூர்' என்பார் பேராசிரியர் மயிலை சிவமுத்து. இவருக்கு 1988-ல் தமிழக அரசு பாவேந்தர் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

### சாமி பழனியப்பன்

இவர் புதுக்கோட்டை மாவட்டம் புதுப்பட்டியைச் சேர்ந்தவர். கொழும்பு வீரகேசரியில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது 1947-ல் இந்திய சுதந்திரநாளில் இவரது 'யாருக்குச் சுதந்திரம்?' என்ற கவிதையைப் பொன்னி வெளியிட்டது. அதனால் வீரகேசரி ஆசிரியருக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சாமி பழனியப்பன் அங்கிருந்து விலகித் தமிழகம் திரும்பினார். பின்னர் 1947 நவம்பரில் இவரது 'அமைதி கொள்க' என்ற பாடலைப்

'பொன்னி' வெளியிட்டு இவரை பாரதிதாசன் பரம்பரையில் அறிமுகப்படுத்தியது. 'தமிழகம்' திரும்பிய இவர், பின்னர் 'பொன்னி', 'வாரச்செய்தி', 'தமிழகம்', 'தென்றல்' முதலிய பத்திரிகைகளில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். தவத்திரு குன்றக்குடி அடிகளாரிடம் தனது உதவியாளராகவும், பின்னர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களிடம் எழுத்து உதவியாளராகவும் பணிபுரிந்தார். 'பாரதியும், பாரதிதாசனும்', 'சிரிக்கும் வையம்', 'சாமி பழனியப்பன் கவிதைகள்' ஆகிய கவிதை நூல்களையும், பல உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். பின்னர், 'தமிழரசு' பத்திரிக்கையின் உதவி ஆசிரியராகவும், தமிழக அரசின் பெரியார் நூற்றாண்டு விழாவின் தொடர்பாளராகவும் பணியாற்றியுள்ளார். இவரது 'சாமி பழனியப்பன் கவிதைகள்' என்னும் கவிதைத் தொகுப்புக்குத் தமிழ்நாடு அரசு முதற்பரிசு வழங்கியுள்ளது. 1990-ல் தமிழக அரசு பாவேந்தர் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

### கோவை இளஞ்சேரன்

இவரது இயற்பெயர் மெய்கண்டசிவம். கோவை மன்னார்குடி இவர்தம் சொந்த ஊர். இவர் தமிழ் வித்துவான் பட்டம் பெற்றவர். புதுக்கோட்டையில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 'பொன்னி' 1948 ஜனவரி இதழ் இவரது 'கண்ணல்ல' என்ற பாடலை வெளியிட்டுப் பாரதிதாசன் பரம்பரையாக இவரை அறிமுகப்படுத்தியது. இவர் பன்னூலாசிரியர். பணி ஓய்வு பெற்றபின், தஞ்சைத் தமி தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியமர்த்தப்பட்டுப் பல்வேறு அரிய தமிழ் நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவருக்கு 1990-ல் தமிழக அரசு பாவேந்தர் விருது வழங்கிப் பாராட்டியுள்ளது.

### குலோத்துங்கன்

கவிஞர் குலோத்துங்கன் என்ற புனைப்பெயர் கொண்ட முனைவர் வா.செ.குழந்தைசாமி திருச்சி மாவட்டம் வாங்கலாம்பாளையம் என்ற சிற்றூரில் பிறந்தவர். காக்கிநாடாவில் பொறியியற் கல்லூரி மாணவராக இருக்கும் போது இவரது 'எங்கள் வாழ்வு' என்ற கவிதையை 1948 செப்டம்பர் 'பொன்னி' இதழ் வெளியிட்டு, இவரைப் பாரதிதாசன் பரம்பரையில் அறிமுகப்படுத்தியது.

பின்னர் இவர், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகளில் பயின்று நீர்வளத் துறையில் டாக்டர் பட்டம் பெற்றார். தமிழகத் தொழில்நுட்பக் கல்வி இயக்குநராகி, யுனெஸ்கோ ஆலோசகர் போன்ற பல பெரும் பொறுப்புக்களை வகித்தார். இவரது கண்டுபிடிப்பு, 'குழந்தைசாமி மாடல்' என்ற பெயரில் அத்துறை இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துணை வேந்தராகிச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். இவரது இலக்கியப் படைப்புகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் டி.லிட். பட்டம் வழங்கியுள்ளது. சர்வதேச நிறுவனம் ஏதென்ஸ் மாநாட்டில் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. இவரது கவிதைகள் மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

### கி.மனோகரன்

இவர் நாகர்கோவிலை அடுத்த கோட்டாறில் படித்த மலையாள மாணவர். இவர் எழுதிய 'செல்வதெங்கே' என்ற பாடலை 1949 பொன்னி அக்டோபர் இதழ் வெளியிட்டு இவரை பாரதிதாசன் பரம்பரையாக அறிமுகப்படுத்தியது. இந்த இளங்கவிஞரே இன்று நாஞ்சில் கி.மனோகரன் ஆகி, சிறந்த பாராளுமன்ற உறுப்பினராக இருந்து – சிறந்த சொற்பொழிவாளராக – தேர்ந்த சட்டமன்ற உறுப்பினராக – தமிழக அரசின் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சராய்ப் புகழ்பெற்று விளங்குகிறார். தான் ஒரு கவிஞர் என்று கூறிக்கொள்வதைப் பெருமையாகக் கொள்பவர்.

இவ்வாறு பொன்னியில் வெளியான பாரதிதாசன் பரம்பரை, 47 பேருடன் அன்று நின்று விட்டது. பொன்னியும் நின்று போயிற்று. ஆனால் அந்தப் பரம்பரை வாழையடி வாழையாக – விழுதுவிட்டு வளர்ந்து வலுப்பெற்ற ஆலமரமாகக் காலத்தை வென்றாண்டு வளர்ந்து கொண்டிருக்கிறது. வற்றாத நீரூற்றுப் போன்றது அந்தப் பரம்பரை. வளர்ந்து கொண்டே இருக்கும். பாரதிதாசன் பரம்பரை, இனங்காட்டிப் பாராட்டிய முருகு சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறது.

★ ★ ★

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் கடனுதவிகள்

## திட்டத்தின் பெயர்

★ சில்லறை வியாபாரம்

★ தொழிற் சேவை நிலையம்

★ போக்குவரத்து

★ விவசாயம்

★ கைவினைஞர் மற்றும் மரபு வழி சார்ந்த தொழில்கள்

## தகுதிகள்

பயனாளிகள் கீழ்க்கண்ட சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

1. பிற்படுத்தப்பட்டோர்
2. மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
3. சீர்மரபினர்
4. சிறுபான்மையினர். (முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர் மற்றும் பார்சீக்கள்)

பயனாளிகள் வருட வருமானம் பின்கண்டவாறு இருக்க வேண்டும் :

1. கிராமப்பகுதியைச் சார்ந்தவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.31,982-க்கு மேற்படாமலும், நகரப் பகுதியைச் சார்ந்தவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.42,412-க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
2. பயனடைவோரின் வயது 18 ஆண்டுகளுக்கு மேல் இருக்க வேண்டும்.
3. ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும்.

## அணுகவேண்டிய அலுவலர்

சென்னையில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், 807, அண்ணா சாலை, சென்னை-2 மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகங்களிலும், அச்சடிக்கப்பட்ட விண்ணப்ப படிவம் பெற்றுக் கொள்ளலாம் (அல்லது) இதற்கான விண்ணப்ப படிவங்கள் வெளியில் அச்சடிக்கப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ (அல்லது) நகல் எடுத்ததோ பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரிடமோ (அல்லது) சம்பந்தப்பட்ட வங்கிகளிலோ விண்ணப்பிக்கலாம்.

## அளிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

கடன் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து பின்வருகின்ற ஆவண நகல்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரிடம் அல்லது வங்கிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

★ சாதிச்சான்றிதழ் மற்றும் வருமானம் சான்றிதழ்

★ குடும்ப அட்டை (ரேஷன் அட்டை)

★ முன்னணியில் உள்ள நிறுவனமொன்றிலிருந்து விலைப்புள்ளி (ஒப்படைப்பு பொருள் விபரப் பட்டியல்)

★ திட்ட அறிக்கை (பெரிய திட்டமாக இருந்தால் மட்டும்)

★ ஓட்டுநர் உரிமம் (போக்குவரத்து வாகனங்களுக்குக் கடன் பெறுவதாக இருந்தால் மட்டும்)

★ அடமானத்திற்குரிய ஆவணங்கள்

## கடன் வழங்கும் முறை

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் (அல்லது) வங்கியினர் விண்ணப்பத்தினைச் சரிபார்த்து பரிசீலனை செய்த பிறகு, அதனை மாவட்ட அளவிலான பரிசீலனைக் குழு ஒப்புதல் பெற்றுக் கடன் விண்ணப்பங்களை மேல் நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைகளுக்கு அவை அனுப்பப்படும். சம்பந்தப்பட்ட வங்கிகள் விண்ணப்பங்களை முறைப்படி பரிசீலனை செய்து டாப்செட்கோ அலுவலகத்திற்குப் பரிந்துரைக்கும். டாப்செட்கோ வங்கியின் பரிந்துரையை ஆய்வு செய்து தகுந்த ஆணை பிறப்பித்து கடன் தொகை வழங்கப்படும்.

## கடன் தொகையின் அளவு

கடன் தொகையின் அளவு ரூ.50,000–க்கு உட்பட்டு இருந்தால் தகுதியின் அடிப்படையில் இக்கழகத்தில் ஒப்புதல் அளிக்கப்படும். கடன் தொகையின் அளவு ரூ.50,000–க்கு மேல் இருந்தால் பிற்படுத்தப்பட்டோருக்குத் தேசிய நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திற்கும், சிறுபான்மையினருக்குத் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகத்திற்கும் திட்ட பிரேரணை அனுப்பி அனுப்புதல் பெற்று பிறகு கடன் வழங்கப்படும்.

மேலும் அவர்கள் வங்கியின் கடன் வழங்கும் விதிமுறை களுக்குட்பட்டு தகுந்த உத்திரவாதம் அளிக்க வேண்டும். பெறப்பட்ட கடன் தொகையின் மூலம் வாங்கப்படும் சொத்துக்களையும் சம்பந்தப்பட்ட வங்கியில் அவர்கள் அடமானம் வைத்தாக வேண்டும்.

## கடன் வழங்கும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்

- ★ நகரக் கூட்டுறவு வங்கிகள்
- ★ தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள்
- ★ மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள்
- ★ தமிழ்நாடு தொழில் வளர்ச்சி வங்கி, சென்னை.
- ★ தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்
- ★ தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி ●

## தமிழ்நாட்டில் ரூ.7500 கோடி முதலீட்டில் பெட்ரோலிய தொழில் வளாகம்

சென்னை – தலைமைச் செயலகத்தில், முதல்வர் கலைஞர் முன்னிலையில், தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் எத்திலின் உற்பத்தி செய்யும் நாஃப்தா க்ராக்கர் தொழில் வளாகம் ஒன்றை நிறுவுவதற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (டிட்கோ), ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மிட்சுயி அண்டு கம்பெனியும் உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

### இதர இரசாயனப் பொருட்கள் உற்பத்தி

இந்த நிகழ்ச்சியின் போது மத்திய அரசின் முன்னாள் தொழில்துறை அமைச்சர் முரசொலிமாறன், தலைமைச் செயலாளர் ஏ.பி. முத்துசாமி, சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டுத் தூதர் ரியுச்சி இஷி, தொழில்துறை செயலாளர், எம்.எஸ். சீனிவாசன், டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆர். கோபாலன், மிட்சுயி கம்பெனியின் இயக்குநர் நகாய் ஆகியோர் உடனிருந்தனர்.

எத்திலின் தவிர, இந்தப் பெட்ரோலிய இரசாயனத் தொழில் வளாகத்தில், ஆண்டொன்றுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் டன் ப்ரோப்புலின் மற்றும் 1 இலட்சத்து 65 ஆயிரம் டன் சி–4 கலவைகளும் உற்பத்தியாகும்.

இந்த உற்பத்திப் பொருட்களின் மூலம் ஆண்டொன்றுக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் டன் வாயு அடிப்படையிலான பாலி ஏத்திலின், 1 இலட்சத்து 50 ஆயிரம் டன் கலவை பாலி எத்திலின் மற்றும் 2 இலட்சத்து 50 ஆயிரம் டன் பாலி ப்ரோப்புலின் ஆகியவையும் தயாரிக்கப்படும். மேலும் பென்சீன், புட்டாடின் மற்றும் இதர பெட்ரோலிய இரசாயனப் பொருட்களும் இவ்வளாகத்திலிருந்து பெறப்படும்.

இந்த பெட்ரோலிய இரசாயனத் தொழில் திட்டம் 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம்நேர் முகமாகவும், மறைமுகமாகவும் மொத்தம் 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைப்பதில் ஜப்பான் நாட்டின் மிட்சுயி நிறுவனமும், அதன் துணை நிறுவனங்களும் மிகுந்த அனுபவமும், உலகச் சந்தையில் பலமும் வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

# நீர் வள ஆதாரங்கள்

ஐம்பூதங்களில் ஒன்றாக விளங்கும் தண்ணீர் மனித சமுதாயத்திற்கு மிகவும் முக்கியமான ஆதாரம் என்பதை நாம் அறிவோம். இயற்கை வளங்களின் சிறப்பை எடுத்துரைத்த திருவள்ளுவர் 'வான் சிறப்பு' எனும் அதிகாரத்தில் நீரின் இன்றியமையாமை பற்றி குறிப்பிட்டுள்ள குறள் பின்வருமாறு :

*'நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி*
*தான்நல்கா தாகி விடின்" (குறள்-2:17)*

மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு அதனிடத்திலே பெய்யாமல் விடுமானால் பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும் என்பது இதன் விளக்கம்.

மனித வாழ்க்கையை நிலைபெறச் செய்வதில் நீரின் பங்கினையும், பூமியில் நிகழும் நீரின் சுழற்சி (Hydro-logical Cycle) எனும் அறிவியல் உண்மையையும் அவர் விளக்கும் பாங்கிலிருந்து வள்ளுவரின் தொலைநோக்குக் கூர்மையை நம்மால் உணர முடிகிறது. வள்ளுவரின் காலத்தில் நீரின் தன்மை குறையாமலும், நீர் மாசுபடாமலும் இருந்த காரணத்தினால்தான் நீரின் குணங்கள் (Water Quality) பற்றி யாதொரு குறளும் வரையவில்லை என்றே தோன்றுகிறது. இல்லாவிட்டால் 'அமில மழையின் ஆபத்து' குறித்தும் ஒரு சில குறட்பாக்களை குறுகத் தறித்திருப்பார்.

இன்றைய சூழலில் நீர் ஆதாரங்கள் பற்றி ஆலோசிக்கும்போது நீரின் இரண்டு அம்சங்கள் முன்னிலைபடுத்தப்படுகிறது. அவை (1) நீரின் அளவு (Quantity aspects) (2) நீரின் குணம் (Quality aspects). இவற்றுள் முதல் அம்சம் குறித்த சில கருத்துக்களை இவ்விதழில் காண்போம்.

ஒவ்வொரு நாட்டிலும் அமைந்துள்ள நீரின் அளவு மற்றும் அதன் வடிவம் நீர் சுழற்சி எனும் பெரு வட்டத்தின் அடிப்படையில் அமைகிறது. பொதுவாக உலகில் நீரின் அமைப்பு பற்றி காண்போமேயானால், அதன் பெரும்பகுதி மனிதனால் நேரடியாக பயன்படுத்த முடியாத கடல் நீரின் வடிவில்தான் உள்ளது (97%). பனிமலைகளாகவும், பனி பிரதேசங்களாகவும் உருவெடுத்தது (2%) போக, மீதியுள்ள 1% தண்ணீர் மட்டுமே மனிதன் நேரடியாக பயன்படுத்துவதற்கு உகந்த உருவில் நன்னீராக அமைந்துள்ளது. மொத்த அளவில் குறைந்த விகிதமே பயன்படும் வகையில் கிடைக்கும் நீர் "மேற்பரப்பு நீர்" (Surface Water) மற்றும் "நிலத்தடி நீர்" (Ground Water) என்ற இரு வகையாக அமைந்து நீர் சுழற்சியின் மூலம் பல்வேறு சூழலியல் மண்டலங்களிடையேயும் பயணித்து செல்கிறது. மேற்பரப்பு நீர் ஆறுகள், ஏரி, குளம் கண்மாய் ஆகியவையாகவும் நிலத்தடி நீர் கிணறுகள் மற்றும் ஊற்றுகளாகவும் பல்வேறு நீர் ஆதாரங்களில் சேமிக்கப்படுகிறது.

உலகிலேயே அதிக அளவில் மழை பெறும் நாடுகளில் ஒன்றான நமது நாடு ஆண்டுக்கு சராசரியாக 1,150 மில்லி மீட்டர் மழை பெறுகிறது இருந்த போதும், நாட்டின் சில பகுதிகள் ஏன் வெள்ளப் பெருக்கின் சீற்றத்திற்கு ஆளாகின்றன; பல பகுதிகள் ஏன் வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கின்றன என்று ஆராய்வோமானால், நாம் பெறும் மழை வளத்தை சிறப்பாக சேமிக்க முடியாத காரணத்தினால்தான் என்பது தெளிவாகும். நமக்கு கிடைக்கும் 400 மில்லியன் ஹெக்டர் மீட்டர் (மி.எ.மீ) மழை அளவில் ஏறக்குறைய 300 மி.எ.மீ. தரை மீது வழிந்தோடி வீணாகிவிடுகிறது. 100 மி.எ.மீ. மட்டும் நிலத்தில் நிலை நிறுத்தப்படுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் நாம் நில வளத்தோடு இணைந்த நீராதார மேலாண்மையை சரிவர மேற்கொள்ளாததே ஆகும். நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 160.40 மில்லியன் ஹெக்டர் நிலங்கள், (ஏறக்குறைய 50%) பல காரணங்களால் உற்பத்தி திறன் குன்றிய தரிசு நிலங்களாக மாறி வரும் நிலையில், நீராதாரத்தை முறையாக மேலாண்மை செய்ய இயலாத சூழ்நிலை உருவாகி விட்டது. மேலும் நாகரீக வாழ்க்கை முறையின் அங்கமான நகர்புற வளர்ச்சியினால் ஏரிகளும், குளங்களும், விளைநிலங்களும் பெரும் குடியிருப்புகளாக மாறிவிட்டன.

இத்தகைய குறைபாடுகளின் மொத்த வெளிப்பாடாக 1947 முதற்கொண்டு ஆண்டொன்றுக்குத் தனிமனிதனுக்குக் கிடைக்கும் மறுசுழற்சி செய்யத்தக்க நன்னீரின் அளவு குறைந்து வருகிறது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் இந்த அளவு மூன்றில் ஒரு பங்காகக் குறைந்துவிட்டது என்றால் அதன் விளைவை நாம் உணர முடிகிறது.

தமிழகத்தை பொறுத்த மட்டில் ஜீவநதி என்று சொல்லப்படுகின்ற நதிகள் ஏதுமில்லை. தமிழகத்தின் நீர்வளம் பெரும்பாலும் பருவமழையையே சார்ந்திருக்கிறது. இப்பருவ மழையால் காவிரி, பாலாறு, வைகை, தாமிரபரணி, அமராவதி, நொய்யல், பவானி ஆகிய ஆறுகள் நீர்வளம் பெறுகின்றன. எனவே, மக்களின் அடிப்படை தேவைகள்,

தொழிற்சாலை உபயோகம் மற்றும் பாசன வசதிக்காக மேற்பரப்பு நீரைக் காட்டிலும் நிலத்தடி நீர் அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

தமிழகத்தின் நீராதாரம் குறித்து தமிழ்நாடு நீர்வள ஆதார அமைப்பு மேற்கொண்ட 1999ஆம் வருட கணக்கீடுகளின் அடிப்படையில் உபயோகிக்கத்தக்க மேற்பரப்பு நீர் (காவிரி படுகை தவிர) 13,117 மி.க.மீ. என்றும் நிலத்தடி நீர் (காவிரி படுகை தவிர) 15,346 மி.க.மீ என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் மக்களின் பல்வேறு பயன்பாடுகளான அடிப்படை வீட்டு உபயோகம், கால்நடை பயன்பாடு, தொழிற்சாலை உபயோகம், பாசன பயன்பாடு, நீர்மின் உற்பத்தி, சுற்றுச்சூழல் தேவைகள் என்று மாநிலத்தின் மொத்த தேவை 31,192.30 மி.க.மீ ஆக இருப்பதால் தண்ணீர் தேவையில் தன்னிறைவு அடையாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பல பகுதிகளில் நிலத்தடி நீரை அளவுக்கு மீறி உறிஞ்சி எடுக்கும் நிலையை பார்க்கிறோம். நிலத்தடி நீர்வளத்தை மிகத் தீவிரமாக (Intensive) பயன்படுத்தும் பஞ்சாப், குஜராத், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களை அடுத்து நாமும் அதிக அளவில் பயன்படுத்தி வருகிறோம் என்பதை புள்ளிவிவரங்கள் தெளிவுபடுத்துகின்றன.




நமது தண்ணீர் தேவையை முழுமையாக பூர்த்தி செய்வதற்கான ஆதாரங்கள் இன்மையால், கிடைக்கின்ற தண்ணீரை சிக்கனமாகவும், தரம் குறையாமலும் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. முறையான தண்ணீர் சேமிப்பு + தண்ணீர் செலவழிப்பில் சிக்கனம் + தண்ணீர் மாசுபெறாமல் தடுப்பது = தண்ணீர் தேவையில் தன்னிறைவு என்ற நிலையை அடைய தனிமனிதனுடைய பொறுப்பை சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது அவசியம். ★

## சுற்றுச்சூழல் வினாடி வினா

சுற்றுச்சூழல் தொடர்பான பொதுவான சில செய்திகளை வினாடி-வினா பகுதியில் தொகுத்து வழங்கியுள்ளோம்.

1. பொதுவாக சுற்றுச்சூழல் மாசுபடுவதை எத்தனை வகையாக பிரிக்கலாம்? அவை யாவை?
2. 1991ஆம் வருட கணக்கீட்டின்படி இந்தியாவில் தனிமனித சராசரி நிலப்பரப்பின் அளவு என்ன?
3. திடக்கழிவுகள் மேலாண்மையில் எளிமையானதும், சிக்கனமானதுமான முறை எது?
4. தண்ணீர் மாசை கண்டறியும் அளவைகளில் ஒன்றைக் குறிப்பிடுக.
5. ஒலி மாசின் அளவை எவ்வாறு குறிப்பிடுகிறோம்?
6. ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்டங்களுக்கான அமைப்பு எது?
7. இந்தியாவில் முதன்முதலாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மாபெரும் இயக்கமாக எந்த ஆண்டில் என்னபெயரில் உருவெடுத்தது?
8. இந்தியாவில் முதன்முதலில் வன விலங்குகள் பாதுகாப்புக்கென்ற அமைப்பு எப்பொழுது எங்கு தொடங்கப்பட்டது?
9. புவி நாள் ஆண்டுதோறும் என்று கொண்டாடப்படுகிறது?
10. ஈகோட்ரிசிட்டி (Ecotricity) என்றால் என்ன?

**விடை :**

1. ஐந்து வகையாகப் பிரிக்கலாம். அவை : (1) காற்று மாசு (2) தண்ணீர் மாசு (3) அனல் மாசு (4) நில மாசு (5) ஒலி மாசு
2. 0.39 எக்டர்
3. மண்புழு உரம் தயாரித்தல்
4. பயோ கெமிக்கல் ஆக்ஸிஜன் டிமாண்ட் (BOD)
5. டெசிபல்
6. ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் செயல்பாடு அமைப்பு (UNEP)
7. உத்திரபிரதேச மாநிலத்தில் 1972இல் சிப்கோ இயக்கம் ஆக உருவெடுத்தது
8. 1883ஆம் ஆண்டில் பம்பாய் இயற்கை வரலாறு சங்கம் (பாம்பே நேச்சுரல் ஹிஸ்டரி சொஸைடி) என்ற அமைப்பு தொடங்கப்பட்டது.
9. ஏப்ரல் 22ஆம் தேதி
10. மீளப்பெறத்தக்க இயற்கை வளங்களிலிருந்து மின் உற்பத்தி செய்யும் முறைக்கு ஈகோட்ரிசிட்டி என்று பெயர்.

*நன்றி : சுற்றுச்சூழல் செய்தி மடல்*



# 1999 நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள்

## 1. வடசென்னை : சி.குப்புசாமி (தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 20,41,314 |
| பதிவான வாக்குகள் | – | 8,93,936 |
| செல்லாதவை | – | 14,463 |

| | | |
|---|---|---|
| சி. குப்புசாமி | திமுக | 4,71,101 |
| ஏ. சவுந்தரராஜன் | இ.கம்யூ(மா) | 3,11,312 |
| ஜே.எம். ஆரூண் ரசீத் | தமாகா | 81,192 |



| | | |
|---|---|---|
| கே. ஸ்ரீனிவாசன் (அ) | | |
| காந்தி ஸ்ரீனிவாசன் | சுயே | 2,877 |
| எஸ். குமாரசாமி | இ.கம்(மா.லெ) | 2,321 |
| டி.சம்பத் | சுயே | 2,227 |
| வி.வி. இராஜேந்திரன் | திதெமுக | 1,767 |
| கே. நித்யானந்தம் | சுயே | 1,054 |
| சி.ஆர். செல்வராஜன் | சுயே | 832 |
| எம்.டி.ஆர்.செல்வராஜ் | சுயே | 638 |
| பி. மாரிமுத்து | சுயே | 633 |
| ஜே.எம். அமானுல்லா | சுயே | 536 |
| நவீதா | இதொவேதேக | 459 |
| ஏ.ஜோசப் கென்னடி | சுயே | 448 |
| ஏ.ஒய். சிக்கந்தர்காசீம் | சுயே | 444 |
| ஏ. அமுதன் | சுயே | 426 |
| ஜி. மூர்த்தி | சுயே | 385 |
| எம். காஞ்சனா | சுயே | 351 |
| ஏ. ரவி | சுயே | 2[illegible]3 |
| ஜி. ஜெயசங்கர் | சுயே | 177 |

★ ★ ★

## 2. மத்திய சென்னை :

### முரசொலி மாறன் (தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 12,75,067 |
| பதிவான வாக்குகள் | – | 6,17,919 |
| செல்லாதவை (அஞ்சல் வாக்குகளில்) | – | 19 |

| | | |
|---|---|---|
| முரசொலி மாறன் | திமுக | 3,64,565 |
| எம். அப்துல் லத்தீப் | அதிமுக | 2,27,616 |
| ஆர். ஜானகியம்மாள் | புத | 5,046 |
| வி.ஜி. லோகநாதன் | சுயே | 3,815 |



| | | |
|---|---|---|
| எஸ். ரங்கநாதன் | சுயே | 3,561 |
| எம். டோமினிக் சேவியர் | சுயே | 2,613 |
| எம்.எஸ். சுதர்சன் | சசக | 2,200 |
| ஏ.பி.எஸ். சுப்பு | தேகா | 1,814 |
| டாக்டர் என்.சந்தோஷ்குமார் | சுயே | 1,620 |
| பி.அம்பெத் வெங்கடேஷ் | சுயே | 887 |
| பாலசாமி | அபாக | 813 |
| ஏ. அனவரதன் | சுயே | 778 |
| எஸ். ராஜசேகர் | திநெமுக | 567 |
| ஏ. ஆறுமுகம் | சுயே | 500 |
| ஆர். கணேசன் | சுயே | 428 |
| எம். ஆசான் மீரான் | சுயே | 419 |
| ஜே. ஆறுமுகம் | சுயே | 350 |
| எஸ். ராமசந்திரன் | சுயே | 308 |

★ ★ ★

## 3. தென்சென்னை :

### டி.ஆர். பாலு (தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் – 20,74,128
பதிவான வாக்குகள் – 9,36,541
செல்லாதவை – 19
(அஞ்சல் வாக்குகளில்)

| | | |
|---|---|---|
| டி.ஆர். பாலு | திமுக | 5,62,221 |
| வி. தண்டாயுதபாணி | இதேகா | 3,22,037 |
| முக்தா வி. ஸ்ரீனிவாசன் | தமாகா | 38,700 |
| எம். ராஜா | சுயே | 4,309 |
| ஜே. மோகன் ராஜ் | சுயே | 2,166 |
| வி.எம். தண்டபாணி | சுயே | 2,117 |
| டி. தனசேகர் | தேஓகா | 1,566 |
| பி. பாபு | சுயே | 1,084 |
| பி. சுரேஷ் | சுயே | 784 |
| எஸ். இளங்கோ | சுயே | 770 |
| ஏ. ஜெயவீரபாண்டியன் | இதொவேதேக | 768 |

★ ★ ★

## 4. ஸ்ரீபெரும்புதூர் (தனி) :

### ஏ. கிருஷ்ணசாமி (தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் – 13,53,858
பதிவான வாக்குகள் – 7,44,852
செல்லாதவை – 15,776

| | | |
|---|---|---|
| ஏ. கிருஷ்ணசாமி | திமுக | 3,85,558 |
| கே. வேணுகோபால் | அதிமுக | 3,10,556 |
| ஜே. புஷ்பராமன் | தமாகா | 28,292 |
| எஸ். ஜானகிராமன் | இ.கம்(மா. லெ) | 1,681 |
| சி. பொன்னய்யா | இஜக | 1,452 |
| கே. இளங்கோவன் | சுயே | 946 |
| என். செல்வம் | சுயே | 591 |

★ ★ ★

## 5. செங்கல்பட்டு :

### ஏ.கே. மூர்த்தி (பாமக) வெற்றி

மொத்த வாக்காளர் – 12,00,040
பதிவான வாக்குகள் – 6,99,911
செல்லாதவை – 11,730

| | | |
|---|---|---|
| ஏ.கே. மூர்த்தி | பாமக | 3,30,551 |
| எஸ்.எஸ். திருநாவுக்கரசு | அதிமுக | 3,17,740 |
| சி. பலராமன் | ஜத(எஸ்) | 18,028 |
| எஸ். எஸ். உஸ்மான் | சுயே | 7,007 |

| | | |
|---|---|---|
| மு. கிருஷ்ண பரயனார் | சுயே | 6,616 |
| பி. மாதவன் | ராஜத | 3,040 |
| அகரம் சித்தரஞ்சன் தாஸ் | சுயே | 1,498 |
| கே. முருகன் | சுயே | 1,307 |
| பி. ஜெயகுமார் | சுயே | 949 |
| ஆர். ஞானமணி | சுயே | 939 |
| சி.என். அங்கமுத்து | சுயே | 506 |

★ ★ ★

## 6. அரக்கோணம் :

**டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் (திமுக) வெற்றி**

மொத்த வாக்காளர் – 11,20,043
பதிவான வாக்குகள் – 7,41,851
செல்லாதவை – 15,738

| | | |
|---|---|---|
| டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் | திமுக | 3,46,520 |
| கே.வி. தங்கபாலு | இதேகா | 2,50,876 |
| ஏ.எம். வேலு | தமாகா | 1,21,386 |
| எஸ். அருண்குமார் | இகுக(ஏ) | 2,180 |
| எஸ். சம்பத் | சுயே | 1,683 |
| புலவர் ஏ. மணிஎழிலன் | சுயே | 989 |
| ஏ.டி. ராஜி | சுயே | 656 |
| ஏ. கந்தப்பன் | சுயே | 607 |
| எஸ். பலராமன் | சுயே | 568 |
| கே.ஏ. முனிசாமி | சுயே | 419 |
| டி. ஆர். அமிர்தலிங்கம் | சுயே | 229 |

★ ★ ★

## 7. வேலூர் :

**என்.டி. சண்முகம் (பாமக) வெற்றி**

மொத்த வாக்காளர் – 11,52,421
பதிவான வாக்குகள் – 7,02,639
செல்லாதவை – 13,264

| | | |
|---|---|---|
| என்.டி. சண்முகம் | பாமக | 3,24,547 |
| முகமது ஆசிப் | அதிமுக | 2,98,862 |
| சி.கே. தமிழரசன் | தமாகா | 44,551 |
| எம். தணிகேசன் | சுயே | 15,158 |
| எம். குப்புசாமி | சுயே | 4,471 |
| ஜே. சத்தியமூர்த்தி | சுயே | 724 |
| சி. சுப்பராயன் | சுயே | 655 |
| வி. என். பன்னீர் | சுயே | 407 |

★ ★ ★

## 8. திருப்பத்தூர் :

**டி. வேணுகோபால் (திமுக) வெற்றி**

மொத்த வாக்காளர் – 11,44,891
பதிவான வாக்குகள் – 7,46,109
செல்லாதவை – 14,494

| | | |
|---|---|---|
| டி. வேணுகோபால் | திமுக | 3,50,703 |
| ஏ.ஆர். ராஜேந்திரன் | அதிமுக | 3,27,090 |
| ஏ. ஜெயமோகன் | தமாகா | 51,932 |
| எம். அமானுல்லா | சுயே | 752 |
| ஜி. ஆறுமுகம் | சுயே | 727 |
| ஏ. மாசிலாமணி | சுயே | 411 |

★ ★ ★

## 9. வந்தவாசி (தனி) :

**எம். துரை (பாமக) வெற்றி**

மொத்த வாக்காளர் – 11,04,886
பதிவான வாக்குகள் – 6,79,992
செல்லாதவை – 11,267

| | | |
|---|---|---|
| எம். துரை | பாமக | 3,45,539 |
| எம். கிருஷ்ணசாமி | இதேகா | 2,86,342 |
| கே.ஏ. வஹாப் | தமாகா | 36,844 |

★ ★ ★

## 10. திண்டிவனம் : செஞ்சி என். ராமச்சந்திரன் (மதிமுக) வெற்றி

மொத்த வாக்காளர் – 11,28,742
பதிவான வாக்குகள் – 6,95,787
செல்லாதவை – 12,186

| | | |
|---|---|---|
| செஞ்சி என். ராமச்சந்திரன் | மதிமுக | 3,23,234 |
| கே. ராமமூர்த்தி | இதேகா | 3,13,884 |
| எஸ்.பி. சுப்ரமணியன் | தமாகா | 40,879 |
| ஜி. வீரமுத்து | ராஜத | 2,113 |
| ஜி. ராகவன் | அபாக | 1,404 |
| என். புண்ணியகோட்டி | சுயே | 1,178 |
| எம். முகமது அலி ஜின்னா | சுயே | 496 |
| ஜி. இனியதயாளன் | சுயே | 413 |

★ ★ ★

**11. கடலூர் :**

**ஆதி. சங்கர் (திமுக) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 11,36,122 |
| பதிவான வாக்குகள் | – | 7,24,354 |
| செல்லாதவை | – | 14,610 |

| | | |
|---|---|---|
| ஆதி. சங்கர் | திமுக | 3,58,367 |
| எம்.சி. தாமோதரன் | அதிமுக | 2,84,414 |
| பி.ஆர்.எஸ். வெங்கடேசன் | தமாகா | 65,467 |
| பி. மன்னன் | சுயே | 757 |
| எம். நூர்கான் | சுயே | 739 |

★ ★ ★

**12. சிதம்பரம் :**

**இ. பொன்னுசாமி (பாமக) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 11,10,229 |
| பதிவான வாக்குகள் | – | 7,32,994 |
| செல்லாதவை | – | 8,689 |

| | | |
|---|---|---|
| இ. பொன்னுசாமி | பாமக | 3,45,331 |
| ஆர். திருமாவளவன் | தமாகா | 2,25,768 |
| டி. சுமதி உதயகுமார் | இதேகா | 1,50,794 |
| டி. முருகானந்தம் | சுயே | 1,606 |
| ஆர். கனகசபை | சுயே | 422 |
| வி. காமராஜ் | சுயே | 384 |

★ ★ ★

**13. தருமபுரி :**

**பி.டி. இளங்கோவன் (பாமக) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 12,26,816 |
| பதிவான வாக்குகள் | – | 7,27,866 |
| செல்லாதவை | – | 12,095 |

| | | |
|---|---|---|
| பி.டி. இளங்கோவன் | பாமக | 3,40,162 |
| கே.பி. முனுசாமி | அதிமுக | 3,14,622 |
| எம்.சி. ராஜேந்திரன் | தமாகா | 26,681 |
| வி. அப்பாவு செட்டி | சுயே | 20,125 |
| சி. செல்வம் | ததேக | 12,215 |
| டி. மகேந்திரன் | சுயே | 640 |
| வி. இளங்கோவன் | சுயே | 590 |
| டாக்டர் டீகே. பத்மராஜன் | சுயே | 372 |
| ஆர். முருகன் | சுயே | 364 |

★ ★ ★



**14. கிருஷ்ணகிரி :**

**வி. வெற்றிசெல்வன் (திமுக) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 11,63,442 |
| பதிவான வாக்குகள் | – | 6,97,254 |
| செல்லாதவை | – | 16,042 |

| | | |
|---|---|---|
| வி. வெற்றிசெல்வன் | திமுக | 3,47,737 |
| எம். தம்பிதுரை | அதிமுக | 3,15,913 |
| ஜி.ஏ. வடிவேலு | ஜத(எஸ்) | 13,154 |
| எஸ். துரைசாமி | ததேக | 2,068 |
| எஸ்.எம்.ராஜு | சுயே | 1,700 |
| சிவகேசவன் (எ) கம்பயநல்லூர் கதிரவன் | சுயே | 640 |

★ ★ ★

**15. ராசிபுரம் (தனி) :**

**டாக்டர் வி. சரோஜா (அதிமுக) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 11,61,474 |
| பதிவான வாக்குகள் | – | 6,43,060 |
| செல்லாதவை | – | 14,059 |

| | | |
|---|---|---|
| டாக்டர் வி. சரோஜா | அதிமுக | 3,04,843 |
| எஸ். உதயராசு | பாமக | 2,66,438 |
| டாக்டர் சி. நடேசன் | தமாகா | 46,564 |
| ஏ. மாதேஸ்வரன் | சுயே | 9,335 |

| | | |
|---|---|---|
| எஸ். செல்வசீராளன் | சுயே | 860 |
| டி.எம். செங்குட்டுவன் | சுயே | 675 |
| கே. ரவீந்திரன் | சுயே | 286 |

★ ★ ★

## 16. சேலம் :

### டி.எம். செல்வகணபதி (அதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 12,57,383 |
| பதிவான வாக்குகள் | – | 7,43,754 |
| செல்லாதவை | – | 12,477 |

| | | |
|---|---|---|
| டி.எம். செல்வகணபதி | அதிமுக | 3,63,689 |
| கே. ராமமூர்த்தி | தராகா | 3,38,278 |
| ஆர். தேவதாஸ் | தமாகா | 19,604 |
| பி.எம். செல்வகுமரன் | சுயே | 2,678 |
| எம். அர்ஜுனன் | தபிபக | 1,631 |
| ஆர். சதாசிவம் | சுயே | 946 |
| ஏ. அசோகன் | சுயே | 672 |
| ஏ. சந்திரமோகன் | இ.கம்(மா.லெ) | 652 |
| பி. சம்பத் குமார் | சுயே | 462 |
| பி.எல். முருகன் | சுயே | 434 |
| கே. கண்ணன் | சுயே | 395 |
| சி. ராமமூர்த்தி | கிமுக | 385 |
| கே. அறிவுமணி | பாமகா | 384 |
| எஸ். கேசவராஜன் | அபாக | 248 |
| டி. பெரியசாமி | சுயே | 235 |
| டி.எம். முகமது நசுருத்தீன் | சுயே | 129 |
| ஆர். மாணிக்கம் | சுயே | 123 |
| பி. சின்னத்தம்பி | சுயே | 107 |
| எம்.ஏ.கே. மணிமேகலன் | தமம | 105 |
| ஆர். ஸ்ரீனிவாசன் | சுயே | 81 |
| எஸ்.கே. ராஜேந்திரன் | சுயே | 39 |

★ ★ ★

## 17. திருச்செங்கோடு

### எம். கண்ணப்பன் (மதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 15,27,064 |
| பதிவான வாக்குகள் | – | 8,45,137 |
| செல்லாதவை | – | 11,122 |

| | | |
|---|---|---|
| எம். கண்ணப்பன் | மதிமுக | 4,09,293 |
| கே. பழனிசாமி | அதிமுக | 4,04,737 |
| டி.எம். கனகசபாபதி | புத | 11,535 |
| இ.பி. கௌரிசங்கர் | ததேக | 3,317 |
| கே. மாதையன் | தமம | 2,570 |
| எம். தண்டபாணி | சுயே | 989 |
| சி. கருப்பண்ணன் | சுயே | 918 |
| பி. செல்வகுமார் | சுயே | 401 |
| ஏ.பி. சொக்கலிங்கம் | சுயே | 255 |

★ ★ ★

## 18. நீலகிரி : எம். மதன் (எ) மாஸ்டர் மதன் (பாஜக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 13,48,417 |
| பதிவான வாக்குகள் | – | 7,42,722 |
| செல்லாதவை | – | 13,722 |

| | | |
|---|---|---|
| எம். மதன் (எ) மாஸ்டர் மதன் | பாஜக | 3,69,828 |
| ஆர். பிரபு | இதேகா | 3,45,869 |
| சி. சின்னராஜ் | புத | 7,612 |
| ஏ.ஜி. சின்னராமசாமி | ததேக | 1,950 |
| ஜி. அஜ்மல் | சுயே | 1,306 |
| எல். ஆனந்தகுமார் | சுயே | 1,258 |
| வழக்கறிஞர் என். ரங்கசாமி | அபாக | 875 |
| ஆர். சண்முகம் | சுயே | 302 |

★ ★ ★

## 19. கோபிசெட்டிபாளையம் :

### கே.கே. காளியப்பன் (அதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 10,66,362 |
| பதிவான வாக்குகள் | – | 6,42,672 |
| செல்லாதவை | – | 16,484 |

| | | |
|---|---|---|
| கே.கே. காளியப்பன் | அதிமுக | 2,99,184 |
| கே.ஜி.எஸ். அர்ஜுன் | திமுக | 2,69,172 |
| சி.கே. குப்புசாமி | தமாகா | 48,304 |
| இரா. மணிகண்டன் | ததேக | 3,224 |
| எஸ்.ஏ. ராமமூர்த்தி | சுயே | 2,506 |
| பழனிசாமி | சுயே | 1,069 |
| வி.என்.சின்ன பொன்னு வாத்தியார் | சுயே | 796 |
| கே.டி. இளங்கோ | சுயே | 566 |
| கே. கே. ஆறுமுகம் | சுயே | 472 |



| | | |
|---|---|---|
| மாதல் | சுயே | 457 |
| ஏ.எம். சேக் தாவூத் | சுயே | 438 |

★ ★ ★

## 20. கோயம்புத்தூர் :

### சி.பி. ராதாகிருஷ்ணன் (பாஜக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 15,71,475 |
| பதிவான வாக்குகள் | – | 8,74,136 |
| செல்லாதவை (அஞ்சல் வாக்குகளில்) | – | 116 |

| | | |
|---|---|---|
| சி.பி. ராதாகிருஷ்ணன் | பாஜக | 4,30,068 |
| ஆர். நல்லக்கண்ணு | இ. கம்யூ | 3,75,991 |
| எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் | தமாகா | 45,205 |
| ஆர். லக்ஷ்மண நாராயணன் | சுயே | 9,502 |
| எம்.பி. செங்கோட்டையன் | சுயே | 3,300 |
| கே. திருமூர்த்தி | அஇபாபி | 3,089 |
| அர்ஜுனன் சம்பத் | சுயே | 2,866 |
| ஏ. நூர்முகமது | சுயே | 2,535 |
| ஆர். பழனிசாமி | ததேக | 1,464 |

★ ★ ★

## 21. பொள்ளாச்சி (தனி) :

### டாக்டர் சி. கிருஷ்ணன் (மதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 10,74,230 |
| பதிவான வாக்குகள் | – | 6,13,153 |
| செல்லாதவை | – | 10,512 |

| | | |
|---|---|---|
| டாக்டர் சி. கிருஷ்ணன் | மதிமுக | 2,93,038 |
| எம். தியாகராஜன் | அதிமுக | 2,83,523 |
| கே.என். ராஜன் | ஜத (எஸ்) | 9,914 |
| எம். ஜோதிராஜ் | புத | 9,280 |
| பி. கணேசன் | சுயே | 6,886 |

★ ★ ★

## 22. பழனி : பி. குமாரசாமி (அதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 11,59,677 |
| பதிவான வாக்குகள் | – | 6,82,853 |
| செல்லாதவை | – | 17,774 |

| | | |
|---|---|---|
| பி. குமாரசாமி | அதிமுக | 2,97,850 |
| ஏ. கணேச மூர்த்தி | மதிமுக | 2,69,133 |
| எஸ்.கே. கார்வேந்தன் | தமாகா | 85,407 |
| எம். தருமலிங்கம் | சுயே | 5,046 |
| கே.எம். நடராஜன் | சுயே | 3,550 |
| கே.எல். முருகேசன் | ததேக | 971 |
| எம். பாலசுப்ரமணி | சுயே | 934 |
| சி. ரத்தினசாமி | சுயே | 676 |
| எஸ்.பி. குமாரசாமி | இதேகிக | 594 |
| கே. அர்ஜுனன் | சுயே | 468 |
| கே.சி. பழனிசாமி | சிசே | 450 |

★ ★ ★

## 23. திண்டுக்கல் :

### சி. சீனிவாசன் (அதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 11,94,616 |
| பதிவான வாக்குகள் | – | 6,86,045 |
| செல்லாதவை | – | 12,647 |

| | | |
|---|---|---|
| சி. சீனிவாசன் | அதிமுக | 2,94,794 |
| எஸ். சந்திரசேகர் | திமுக | 2,74,451 |
| என்.எஸ்.வி. சித்தன் | தமாகா | 69,713 |
| கே. சுரேந்திரன் | அஇபாபி | 32,342 |

| | | |
|---|---|---|
| ஆர். சுப்பிரமணியன் | சுயே | 995 |
| எஸ். கேப்ரன் | சுயே | 361 |
| கே. பாண்டியம்மாள் | சுயே | 349 |
| ஜே. ரவீந்திரன் | சுயே | 199 |
| எம். மச்சக்காளை | சுயே | 194 |

★ ★ ★

## 24. மதுரை : பி. மோகன் (இ.கம்யூ(மா) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 14,29,975 |
| பதிவான வாக்குகள் | – | 7,88,700 |
| செல்லாதவை | – | 296 |
| (அஞ்சல் வாக்குகளில்) | | |

| | | |
|---|---|---|
| பி. மோகன் | இ.கம்யூ(மா) | 3,28,204 |
| பொன்.முத்துராமலிங்கம் | திமுக | 2,90,981 |
| ஏ.ஜி.எஸ். ராம்பாபு | தமாகா | 89,956 |
| சுப்ரமணியன்சாமி | ஜக | 20,489 |
| எஸ். சிங்கராஜன் | சுயே | 10,625 |
| டாக்டர் எம். மீனாட்சி சுந்தரம் | சுயே | 5,593 |
| ஆர். குணசேகரன் | அபாக | 2,539 |

★ ★ ★

## 25. பெரியகுளம் : தினகரன் (அதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 11,21,725 |
| பதிவான வாக்குகள் | – | 6,66,934 |
| செல்லாதவை | – | 8,403 |

| | | |
|---|---|---|
| தினகரன் | அதிமுக | 3,03,881 |
| பி. செல்வேந்திரன் | திமுக | 2,58,075 |
| மன்சூர் அலிகான் | புத | 87,429 |
| பி.ஆர். ஜெகன்னாதன் | திதெமுக | 1,414 |
| ஏ. சடையாண்டி | சுயே | 1,327 |
| சி. ராஜகோபால் | சுயே | 1,256 |
| கே. இளமுருகன் | சுயே | 1,105 |
| எஸ். ஆர். சேகர் | சுயே | 959 |
| பி. செல்வம் | அஇபாக | 928 |
| வி. காளிசாமி | சுயே | 670 |
| கே. கந்தசாமி | சுயே | 486 |
| கே. பாண்டியம்மாள் | சுயே | 275 |
| கே. பழனிசாமி | சுயே | 209 |
| வி. காசிமாயன் | சுயே | 206 |
| பி. சரவணபாண்டியன் | சுயே | 162 |
| எஸ். பூவைய்யா | சுயே | 149 |

★ ★ ★

## 26. கரூர் : எம். சின்னசாமி (அதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 11,70,582 |
| பதிவான வாக்குகள் | – | 7,36,611 |
| செல்லாதவை | – | 16,906 |

| | | |
|---|---|---|
| எம். சின்னசாமி | அதிமுக | 3,34,407 |
| கே.சி. பழனிசாமி | திமுக | 3,31,560 |
| கே. நட்ராயன் | தமாகா | 45,539 |
| கே. சத்தியமூர்த்தி | சுயே | 4,970 |
| எஸ். செந்தில் ராஜா | சுயே | 943 |
| எஸ். பாலகிருஷ்ணன் | சுயே | 865 |
| டி. மதிவாணன் | சுயே | 375 |
| எம். சின்னசாமி | சுயே | 278 |
| சி. சீனிவாசன் | சுயே | 271 |
| ஆர்.எம்.தயாளன் | சுயே | 259 |
| பி. முருகேசன் | சுயே | 238 |

## 27. திருச்சிராப்பள்ளி : ரங்கராஜன் குமாரமங்கலம் (பாஜக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 12,45,971 |
| பதிவான வாக்குகள் | – | 7,02,752 |
| செல்லாதவை | – | 11,616 |

| | | |
|---|---|---|
| ரங்கராஜன் குமாரமங்கலம் | பாஜக | 3,77,450 |
| எல். அடைக்கலராஜ் | இதேகா | 2,88,253 |
| எம். ராஜசேகரன் | தமாகா | 17,256 |
| ஏ.கே. பிச்சை | சுயே | 2,293 |
| எஸ். கண்ணன் | சுயே | 1,701 |
| ஏ. உசைன்கான் | சுயே | 1,189 |
| எஸ். அழகிய மணவாளன் | சுயே | 725 |
| கே.அன்பழகன் | சுயே | 720 |
| கே.முத்துசாமி | சுயே | 374 |
| ஜி. சக்திவேல் | சுயே | 370 |
| ஆர். அந்தோணிராஜ் | சுயே | 301 |

| | | |
|---|---|---|
| சி. அன்பழகன் | சுயே | 254 |
| ஏ. நாகேந்திரன் | சுயே | 250 |

★ ★ ★

### 28. பெரம்பலூர் (தனி) :

### ஏ. ராஜா (திமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 10,64,321 |
| பதிவான வாக்குகள் | – | 6,95,743 |
| செல்லாதவை | – | 15,128 |

| | | |
|---|---|---|
| ஏ. ராஜா | திமுக | 3,30,675 |
| பி. ராஜரத்தினம் | அதிமுக | 2,62,624 |
| டி. பெரியசாமி | தமாகா | 85,209 |
| கே. சிங்காரம் | சுயே | 1,329 |
| ஏ. வரதராஜன் | சுயே | 778 |

★ ★ ★

### 29. மயிலாடுதுறை :

### மணிசங்கர் அய்யர் (இதேகா) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 10,30,626 |
| பதிவான வாக்குகள் | – | 6,55,340 |
| செல்லாதவை | – | 9,544 |

| | | |
|---|---|---|
| மணிசங்கர் அய்யர் | இதேகா | 3,24,384 |
| பி.டி. அருள்மொழி | பாமக | 2,84,253 |
| கே. கிருஷ்ணமூர்த்தி | தமாகா | 34,998 |
| எஸ். பாலசுந்தரம் | இ.கம்யூ(மா.லெ) | 2,161 |

★ ★ ★

### 30. நாகப்பட்டினம் (தனி) :

### ஏ.கே.எஸ். விஜயன் (திமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 10,54,666 |
| பதிவான வாக்குகள் | – | 6,96,279 |
| செல்லாதவை | – | 10,767 |

| | | |
|---|---|---|
| ஏ.கே.எஸ். விஜயன் | திமுக | 3,42,237 |
| எம். செல்வராசு | இ.கம்யூ. | 3,19,771 |
| டி. நடையழகன் | புத | 22,346 |
| துரை பாலகுரு | சுயே | 1,158 |

★ ★ ★



### 31. தஞ்சாவூர் :

### எஸ்.எஸ். பழனிமாணிக்கம் (திமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 10,49,837 |
| பதிவான வாக்குகள் | – | 6,61,815 |
| செல்லாதவை | – | 11,421 |

| | | |
|---|---|---|
| எஸ். எஸ். பழனிமாணிக்கம் | திமுக | 2,95,191 |
| கே. தங்கமுத்து | அதிமுக | 2,62,177 |
| பி.எல்.ஏ. சிதம்பரம் | தமாகா | 69,025 |
| ஜே. ஜெயபாலன் | சுயே | 12,239 |
| டாக்டர் ஏ. ஸ்ரீனிவாசன் | அஇபாபி | 10,704 |
| சோழமன்னார் கே.கனகராஜ் | சுயே | 530 |
| டி. அந்தோணி டென்சிங் | சுயே | 528 |

★ ★ ★

### 32. புதுக்கோட்டை : எஸ். திருநாவுக்கரசு

### (எம்.ஜி.ஆர்.அதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 12,18,297 |
| பதிவான வாக்குகள் | – | 7,80,852 |
| செல்லாதவை | – | 10,848 |

| | | |
|---|---|---|
| எஸ். திருநாவுக்கரசு | எம்.ஜி.ஆர்.அதிமுக | 3,96,216 |
| எஸ். சிங்காரவடிவேலு | இதேகா | 3,31,914 |
| எம். பழனியப்பன் (எ) புரட்சி கவிதாசன் | புத | 29,453 |
| எம். ராமய்யா | சுயே | 7,710 |
| ஏ.பி. மோகன் | சுயே | 1,977 |
| டி. வில்லியம்ஸ் | சுயே | 1,413 |
| கே. சந்தானலஷ்மி | சுயே | 805 |
| வி. சந்திரவேலப்பன் | சுயே | 516 |

★ ★ ★

## 33. சிவகங்கை :

### இ.எம். சுதர்சன நாச்சியப்பன் (இதேகா) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 11,17,223 |
| பதிவான வாக்குகள் | – | 6,23,958 |
| செல்லாதவை | – | 12,327 |

| | | |
|---|---|---|
| இ.எம். சுதர்சன நாச்சியப்பன் | இதேகா | 2,46,078 |
| எச். ராஜா | பாஜக | 2,22,267 |
| ப. சிதம்பரம் | தமாகா | 1,27,528 |
| எஸ்.எம். விமல்ராஜ் | அஇபாபி | 3,796 |
| வி. சிதம்பரம் | சுயே | 3,151 |
| ஏ. ராமு | ராஜத | 2,909 |
| எஸ். சண்முகம் | சுயே | 1,901 |
| பி. குணசேகரன் | சுயே | 1,876 |
| ஜி. சந்தானமேரி | இ.கம்யூ(மா.லெ) | 1,223 |
| பி.ஆர்.அழகப்பன் | சுயே | 551 |
| எம். முத்துராமலிங்கம் | சுயே | 351 |

★ ★ ★

## 34. ராமநாதபுரம் :

### கே. மலைச்சாமி (அதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 11,15,127 |
| பதிவான வாக்குகள் | – | 6,40,694 |
| செல்லாதவை | – | 11,386 |

| | | |
|---|---|---|
| கே. மலைச்சாமி | அதிமுக | 2,65,253 |
| எம்.எஸ்.கே. பவானி ராஜேந்திரன் | திமுக | 2,58,607 |
| டாக்டர் கே.நசிரா பர்வீன் | புத | 96,334 |
| கே.ஓ. ராமசாமி | சுயே | 5,494 |
| ஆர்.களஞ்சியம் | அஇபாபி | 2,707 |
| அயரவல்லி (எ) எஸ். அமீனாள் | சுயே | 588 |
| பி.இளவரசன் | சுயே | 325 |

★ ★ ★

## 35. சிவகாசி :

### வைகோ (மதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 12,57,935 |
| பதிவான வாக்குகள் | – | 7,90,752 |
| செல்லாதவை | – | 11,288 |

| | | |
|---|---|---|
| வைகோ | மதிமுக | 3,25,829 |
| ஜஸ்டிஸ் வி.ராமசாமி | அதிமுக | 2,51,048 |
| ஏ. குணசேகரன் | தமாகா | 1,52,817 |
| ஆர். தாமரைக்கனி | சுயே | 36,977 |
| ஏ. சோமசுந்தரம் | சுயே | 4,660 |
| ஏ.சி. சீனிசாமி தேவர் | அஇபாபி | 4,330 |
| வி. சீனிவாசகன் | சுயே | 944 |
| கே. சுப்புக்காளை | சுயே | 669 |
| பி.ஐ. தியாகராஜன் (எ) யோககண்ணன் | சுயே | 500 |
| பி. சகாதேவன் | சுயே | 454 |
| ஐ. ராமசாமி | சுயே | 378 |
| வி. கண்ணன் | சுயே | 234 |
| கே. கணேசன் | சுயே | 224 |
| என். குணசேகரன் | சுயே | 163 |
| எம். மன்மதன் | சுயே | 154 |
| கே. முத்துபாண்டியன் | சுயே | 83 |

★ ★ ★

## 36. திருநெல்வேலி :

### பி.எச். பாண்டியன் (அதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 11,21,877 |
| பதிவான வாக்குகள் | – | 6,10,090 |
| செல்லாதவை | – | 9,536 |

| | | |
|---|---|---|
| பி.எச். பாண்டியன் | அதிமுக | 2,49,975 |
| பி. கீதா ஜீவன் | திமுக | 2,23,481 |
| பி.வி. பக்தவச்சலம் | புத | 1,12,941 |
| எம். சேதுராம பாண்டியன் | அஇபாபி | 3,913 |
| எஸ். சுந்தரராஜ் | சுயே | 2,534 |
| டி. சுயம்புலிங்கம் | சுயே | 2,463 |
| ஜே.டி. சாக்ரடஸ் | சுயே | 2,288 |



| | | |
|---|---|---|
| ஏ. மொஹமது சேக் இப்ராஹிம் | சுயே | 864 |
| பி.ஹரிகிருஷ்ணன் | சுயே | 733 |
| கே. லஷ்மணன் | சுயே | 554 |
| என். சந்திர பிரகாஷ் | சுயே | 359 |
| எம். தர்மசீலன் | சுயே | 242 |
| சி. சரவணன் | சுயே | 207 |

## 37. தென்காசி (தனி) :

### எஸ். முருகேசன் (அதிமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 10,44,090 |
| பதிவான வாக்குகள் | – | 6,77,205 |
| செல்லாதவை | – | 10,379 |

| | | |
|---|---|---|
| எஸ். முருகேசன் | அதிமுக | 2,39,241 |
| எஸ். ஆறுமுகம் | பாஜக | 2,38,354 |
| டாக்டர் கே.கிருஷ்ணசாமி | புத | 1,86,220 |
| டி. பாலமுருகன் | சுயே | 2,316 |
| ஆர். சண்முக சுந்தராஜ் | சுயே | 695 |

★ ★ ★

## 38. திருச்செந்தூர் :

### ஏ.டி.கே.ஜெயசீலன் (திமுக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 10,40,627 |
| பதிவான வாக்குகள் | – | 5,43,932 |
| செல்லாதவை | – | 8,860 |

| | | |
|---|---|---|
| ஏ.டி.கே. ஜெயசீலன் | திமுக | 2,37,630 |
| டாக்டர் பி.பி.ராஜன் | அதிமுக | 1,77,964 |
| ஆர்.தனுஷ்கோடி ஆதித்தன் | தமாகா | 1,09,035 |
| எஸ். வையலோ செல்வின் நாடார் | சுயே | 8,323 |
| பி.குமார் | சுயே | 850 |
| ஆர். செந்தில் வேல்முருகன் | சுயே | 842 |
| எஸ். தேவதாசன் ராஜா | சுயே | 428 |

★ ★ ★

## 39. நாகர்கோவில் :

### பி. ராதாகிருஷ்ணன் (பாஜக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | – | 10,57,712 |
| பதிவான வாக்குகள் | – | 6,21,397 |
| செல்லாதவை | – | 9,302 |

| | | |
|---|---|---|
| பி.ராதாகிருஷ்ணன் | பாஜக | 3,07,319 |
| என்.டென்னிஸ் | இதேகா | 1,61,676 |
| டாக்டர் குமாரதாஸ் | தமாகா | 1,39,030 |
| எம். பாபு | சுயே | 1,707 |
| ரேமா ஜனார்தனன் நாயர் | சுயே | 994 |
| வி.அப்பு | சுயே | 576 |
| பி. ஜோசப் | சுயே | 288 |
| ஏ. அய்யப்பன் | சுயே | 278 |
| என். முருகன் | சுயே | 227 |

★ ★ ★

# புதுப்புனல்

வரையிழிந்து நெளிந்தழகு நடைப யிற்றி
வருகின்றாய் புதுப்புனலே! பசுமை யெல்லாம்
கரைமருங்கில் பூச்சிரிப்பால் வரவு சொல்ல,
கிளைக்கரத்தால் உனைத்தழுவும் மரக்கூட் டங்கள்!
விரைந்துளத்தை ஈர்க்கின்ற உன்னி சைக்கு
விண்சுற்றும் புள்ளினங்கள் சுருதி கூட்டும்!
கரைந்துவரும் செம்மைநிறம் உலகுக் கெல்லாம்
காட்டிடுமே நெஞ்சங்கள் கலப்பதையே!

புரட்டுகின்றாய் தடைகற்கள்! பசுமை வாழ
புதுப்புனலே! பள்ளங்கள் நிரப்பு கின்றாய்!
விரட்டுகின்றாய் வறுமைதனை! பயிர்கள் வாழ
விண்ணிழந்த தாய்மையுள்ளம் நீனதன்றோ? நின்
அருட்சுரப்பால் செழிப்பவைகள் முதுமை யுற்றும்
அழகழியா இளமைநலம் எங்கே பெற்றாய்?
இருள்தடிந்த சீரிளமைத் தமிழ் நிலத்தில்
இருப்பதனால், புதுப்புனலே! பெற்றா யோ நீ?

புதுப்புனலே! பொன்னாடி வந்த னையோ?
பூவையரின் மென்விரலை ஒத்தி ருக்கும்
மதுநிறைத்த பூவாடி வந்த னையோ?
மயிலன்னாய்! செங்கதிரோன் பேக னாகி
புதுப்போர்வை அளித்தானோ? மின்னு கின்ற
புதுமையெலாம் கண்கொள்ளாக் காட்சி யன்றோ?
புதுப்புனலே! புதுஅழகே! உளம்பூ ரிக்கப்
புதுமுறுவல் நொடிதோறும் பூக்கின் றாயே!

– சி. திருநாவுக்கரசு

# டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கும் விழா

நடக்க வேண்டிய காலத்தில் விழா நடக்காமல் காலம் தாழ்ந்து நடைபெறுகிறது என்பதை எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நடக்க வேண்டிய காலங்களில் நடக்க வேண்டிய தேர்தல் நடக்காமல் முன்கூட்டி நடந்து விட்ட காரணத்தால், நாம் நம்முடைய நிகழ்ச்சியை பின்னுக்குத் தள்ள வேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறோம் என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

இருந்தாலும் இந்த இனிய நிகழ்ச்சி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுடைய நினைவைப் போற்றுகின்ற வகையில் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சியாகும். இதற்கு ஏற்கனவே "நல்லாசிரியர் விருது வழங்கும் விழா" என்றிருந்த தலைப்பை மாற்றி இந்த அரசு "ராதாகிருஷ்ணன் விருது வழங்கும் விழா" என்று அமைத்திருப்பதை இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

**சிந்தனையாற்றல் மிக்க செம்மல்**

இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராக அவர் இருந்தார் என்பது மாத்திரம் மறைந்தும் மறையாத மாமேதை இராதாகிருஷ்ணன் அவர்களுக்குப் பெருமையல்ல. அவர் படித்ததை, உணர்ந்ததை, உலக நாடுகளிலே சுற்றி அறிந்ததை எப்படியெல்லாம் மக்களிடத்திலே பரப்ப வேண்டுமென்கின்ற சீரிய சிந்தனையோடு செயல்பட்டார் என்பதும் அவருடைய வாக்கியங்கள் பல, கருத்துக்கள் பல நமக்கெல்லாம் வழி காட்டக்கூடியவை என்பதாலும் தான் அவர் பெருமைக்குரிய மனிதராகப் போற்றப்படுகிறார். எனவே இந்த விருது முன்னாள் குடியரசுத் தலைவருடைய பெயரால் வழங்கப்படுகிற விருது என்பதைவிட சிந்தனையாற்றல் மிக்க ஒரு செம்மலின் பெயரால் வழங்கப்படுகின்ற விருது என்று கூறுவதுதான் சாலப் பொருத்தமுடையதாகும்.

**கடமைக்குப் பாராட்டு; திறமைக்குப் பரிசு !**

இன்றைக்கு இந்த நிகழ்ச்சியிலே 334 ஆசிரியர்கள்,

202 மாணவர்கள் பாராட்டப்படுகின்றார்கள். 334 ஆசிரியர்களுக்கு இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்படுகின்றது. 202 மாணவர்களுக்குப் பரிசுகள் அவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலே இங்கே வழங்கப்படுகின்றன. அதாவது கடமைக்குப் பாராட்டு – திறமைக்குப் பரிசு என்கின்ற வகையில் இந்த விழா பாடுபட்டு பயிற்சி அளித்து அதைத் தொடர்ந்து நடத்தி வருகின்ற ஆசிரியப் பெருமக்கள் இந்த விருதுகளைப் பெறுவதின் மூலம்அவர்களுக்கு அரசின் சார்பில் விருதுகள் வழங்கி சிறப்புச் செய்வதின் மூலம் கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதன் மூலம் மேலும் பல ஆசிரியர்களைத் தயார் படுத்த பயன்படும் என்ற அளவிலே பரிசளிக்கப்படுகின்றது. எனவே ஊக்கப்படுத்த–மேலும் மேலும் அவர்கள் நடந்து செல்லும் பாதையிலே நல்ல நெறி உணர்வோடு அவர்களும் நடந்து மற்றவர்களையும் அவ்வாறு நடக்கச் செய்வதற்கு வழிகாட்டுகின்ற முறையிலே இந்த விழா பயன்பட வேண்டும் என்பது தான், இந்த நிகழ்ச்சியின் முக்கியமான குறிக்கோள்.



அமைந்திருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

கடமையைச் செவ்வனே ஆற்றி நேர்மையோடும் நாணயத்தோடும் ஒழுக்கத்தோடும் மாணவர்களை இந்தச் சமுதாயத்தினுடைய சிறந்த மனிதர்களாக எதிர்காலத்திலே ஆக்குவதற்காக ஆர்வத்தோடு உழைத்துப் தான் இந்த நிகழ்ச்சியை அரசின் சார்பிலே ஏற்பாடு செய்திருக்கிறோம்.

அதைப்போலவே மாணவ மணிகள்– அவர்களுடைய பாடங்களில் பெறுகின்ற மதிப்பெண் அடிப்படையிலே அவர்களுக்கும் இங்கே

**கேட்காமலேயே ஆசிரியர்களுக்குப் பல சலுகைகளை வாரி வழங்கும் கழக அரசு**

ஆசிரியர்கள்தான் ஒரு சமுதாயத்தினுடைய தூண்டுகோலாக இருக்கக் கூடியவர்கள். இந்த அரசு

ஆசிரியர்களுக்கு, அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுகின்ற வகையில் – நியாயம் என்று பட்ட கோரிக்கைகள் எதுவாயினும் அவர்கள் கேட்காமலேயே தானே முன்வந்து வழங்குகின்ற வகையிலே செயல்படுவதற்குக் காரணமே–சமுதாயம் முன்னேற வேண்டும் என்ற அந்த ஆர்வம் தான். அதற்கு வழிகாட்டிகளாக இருக்கக் கூடியவர்கள் ஆசிரியர்கள் தான் என்பதை உணர்ந்த காரணத்தினாலே தான் இந்த அரசு குறிப்பாகவும் சிறப்பாகவும் ஆசிரியப் பெருமக்களுடைய துன்பங்கள் அகல, அவர்களுடைய உரிமைகள் மேலும் மேலும் உயர, அவர்களுடைய வாழ்வு வளம் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு பல திட்டங்களை அறிவித்து, அவர்களுடைய் கோரிக்கைகளை எல்லாம் முகம் கோணாமல் வாரி வழங்கி வருகின்றது என்பதையும், தொடர்ந்து வழங்கும் என்ற உறுதியையும் நான் இந்த விழாவில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

***"உன்னதமான ஆசிரியர், உள்ளத்தில் ஒளிபாய்ச்சுவார்; எழுச்சி ஊட்டுவார்"***

ஆசிரியர்களைப் பற்றி ஆர்னால்ட் என்கின்ற அறிஞன் சொல்லும் போது –

"a poor teacher speaks; an ordinary teacher explains; a good teacher demonstrates; a great teacher inspires!"

அதாவது "மோசமான **ஆசிரியர் பேசுவார் – பேசுவார்.** பேசுவார், பேசிக்கொண்டே இருப்பார். சாதாரண ஆசிரியர் விளக்குவார். நல்ல ஆசிரியர் செய்து காட்டுவார், **உன்னதமான ஆசிரியர் உள்ளத்தில் ஒளி பாய்ச்சுவார், எழுச்சி ஊட்டுவார்"**

– என்று ஆர்னால்ட் என்ற அறிஞர் குறிப்பிட்டதை இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

"a lamp cannot light another lamp unless it continues burning"

"தொடர்ந்து எரிந்து கொண்டிராத ஒரு விளக்கு மற்றொரு புதிய விளக்கை எரியச் செய்ய முடியாது"
ஆசிரியர்களைப் பற்றி தாகூர் கூறிய பொன்மொழியாகும் இது.



ஆம், தொடர்ந்து எரிந்து கொண்டிருக்க வேண்டிய விளக்கு – ஆசிரியர்கள், தாங்கள் ஆசிரியர்களாக ஆகிவிட்ட காரணத்தால் படிக்காமல் இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் தாகூர் இதைச் சொல்லியிருப்பாரென்று நான் கருதுகின்றேன்.

ஆசிரியர்கள் தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தால் தான் மாணவர்களைப் படிக்கச் செய்ய முடியும் என்பதற்காகத் தான் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கின்ற விளக்கினால் தான் புதிய விளக்கை எரியச் செய்ய முடியுமென்று குறிப்பிட்டார். இப்படி தொடர்ந்து எரியும் விளக்குக்கு உவமையாகச் சித்தரிக்கப்படுகின்ற ஆசிரியச் சமுதாயம் மாணவச் சமுதாயத்தை இன்றைக்கு உயர்த்த வேண்டிய பெரும் பொறுப்பிலே இருக்கின்ற ஒரு சமுதாயமாகும்.

இந்த அரசு கல்வித் துறையைப் பொறுத்தவரை – நான் பலவேறு ஆசிரியர்கள் நிகழ்ச்சிகளில் முன்பெல்லாம் எடுத்துக் காட்டியதை மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன். ஏனென்றால் மக்களுக்கு மறதி அதிகம். சலுகைகளை, உரிமைகளைப் பெற்றவர்களுக்கே கூட அவைகள் மறந்து போய்விடும். அவ்வளவு ஏன், கொடுத்த எனக்கே கூட பலது மறந்து போய்விடுகிறது. அதனால்தான் நானும் நினைவூட்டிக் கொள்ள, உங்களுக்கும் நினைவுபடுத்த இந்த அரசு கல்வித் துறையிலே ஆற்றியிருக்கின்ற எல்லா பணிகளையும் இல்லாவிட்டாலுங் கூட குறிப்பிட்ட ஒன்றிரண்டை நினைவூட்ட விரும்புகிறேன்.

கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில்– அதாவது 96–க்கு முன்பு தமிழகத்தை ஆண்ட அந்த ஆட்சிக் காலத்தில் ஆசிரியர்கள் எவ்வளவு பேர் நியமிக்கப்பட்டார்கள் என்றால் இடைநிலை ஆசிரியர்கள் 8,450 பேர். பட்டதாரி ஆசிரியர்கள் 838. முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் 843 பேர். தனியார் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் 327 பேர். ஆக, கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் மொத்தம் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 10,458 பேர். இந்த நியமனங்கள் எப்படிப்பட்டவை, எவ்வாறு செய்யப்பட்டன, எந்த வகையிலே, எந்த வழியிலே செய்யப்பட்டவை என்பதையெல்லாம் நான் விளக்கத் தேவையில்லை. ஆசிரியர் நிகழ்ச்சி அரசியல் நிகழ்ச்சியாக ஆகிவிடக் கூடாதென்பதற்காக விளக்கவும் விரும்பவில்லை.

### வேலை வாய்ப்பு பதிவு முன்னுரிமைப்படி ஆசிரியர் நியமனம்

ஆனால் 1996–க்குப் பிறகு இந்த மூன்றாண்டு கால ஆட்சியில் வேலைவாய்ப்பு பதிவு முன்னுரிமைப்படி – எப்படியோ, எவ்வாறோ என்றில்லாமல் – நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் மாத்திரம் 39,824 பேர். பட்டதாரி ஆசிரியர்கள் 3,672 பேர். முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் 3,162 பேர். சிறப்பு ஆசிரியர்கள் 1,946 பேர். கல்லூரி ஆசிரியர்கள் 828 பேர். தனியார் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் 2,001 பேர்.

ஆக மொத்தம் இந்த மூன்றாண்டு காலத்தில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 51,433 பேர்.

### புதிய தொடக்கப் பள்ளிகளை உருவாக்க இன்னமும் தொடரும் முயற்சி

1996ஆம் ஆண்டுக்கு முன்புள்ள ஐந்தாண்டு கால ஆட்சியில் புதிய தொடக்கப் பள்ளிகளை உருவாக்கியது 531 பள்ளிகள். இந்த மூன்றாண்டுகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் மாத்திரம் 953. அந்தப் பள்ளிகளை உருவாக்குகின்ற முயற்சி இன்னமும் தொடர்கிறது.

தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தியதை ஒப்பிட்டுப் பார்த்தால் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் 126 பள்ளிகள், இந்த மூன்றாண்டுகளில் 462 பள்ளிகள்.

நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியதை ஒப்பிட்டுப் பார்த்தால் கடந்த ஐந்தாண்டுகளில் 137 பள்ளிகள்தான். இந்த மூன்றாண்டுகளில் 319 பள்ளிகள்.

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தியதை ஒப்பிட்டுப் பார்த்தால் கடந்த ஐந்தாண்டுகளில் 85 பள்ளிகள்தான். இந்த மூன்றாண்டுகளில் மாத்திரம் 250 பள்ளிகள்.

கூடுதல் வகுப்பறைகளைக் கட்டியதை ஒப்பிட்டுப் பார்த்தால் கடந்த ஐந்தாண்டுகளில் 100 பள்ளிகளுக்கு 3 கோடி ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டன. இந்த மூன்றாண்டுகளில் 855 பள்ளிகளுக்கு 40 கோடியே 49 இலட்ச ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் அறிவியல் கூடங்கள் கட்டியதை ஒப்பிட்டுப் பார்த்தால் கடந்த ஐந்தாண்டுகளில் 43 பள்ளிகளில் 85 இலட்ச ரூபாய் செலவில் அறிவியல் கூடங்கள் கட்டப்பட்டன. இந்த மூன்றாண்டுகளில் 662 பள்ளிகளில் 39 கோடியே 9 இலட்ச ரூபாய் செலவில் அறிவியல் கூடங்கள். அறிவியலுக்கு அப்போது இருந்த மதிப்பும் இப்போது இருக்கின்ற மதிப்பையும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். இந்தச் செலவினத்தை வைத்தே என்பதற்காக இதை நான் குறிப்பிடுகின்றேன்.

கடந்த ஐந்தாண்டுகளில் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கூடங்களுக்கு ஆய்வுக் கருவிகள் வாங்கியது மாத்திரம் 90 பள்ளிகளிலே 85 இலட்சம் ரூபாய் செலவிலே வாங்கப்பட்டது. இந்த மூன்றாண்டுகளில் 1,204 பள்ளிகளில் 5 கோடியே 68 இலட்ச ரூபாய் செலவிலே அறிவியல் ஆய்வுக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளது.

### ஆசிரியர்களும், மாணவர்களும் சமுதாயத்திற்கு ஆற்றும் கடமையினை தொடர்ந்து ஆற்றிடல் வேண்டும்

இப்படியெல்லாம் வாங்கலாம் என்று முன்பு தெரியாமல் போயிற்றே என்று பழையவர்கள் கவலைப்படக்கூடும். தெரிந்திருந்தால் அதிலேயும் – அவ்வளவு தான் சொல்லமுடியும். இப்படி உண்மையிலேயே கல்விக்காக, கல்வித்துறையிலே இயங்குகின்ற ஆசிரியப் பெருமக்களுக்காக, இந்தக் கல்வியின் பயனைப் பெறவேண்டும், எதை எப்படி எல்லாம் பெறவேண்டும், எவ்வளவு திறமையாக ஆர்வத்தோடு பெறவேண்டுமென்ற வகையிலே ஊக்கப்படுத்தப்படுகின்ற மாணவர்களுக்காக, மாணவிகளுக்காக இந்த அரசு என்றென்றும் தன்னுடைய கடமையைத் தொடர்ந்து செய்யத் தயாராக இருக்கின்றது. அதற்குத்தான் இந்த விழா என்பதைத் தெரிவித்து, ராதாகிருஷ்ணன் அவர்களுடைய நினைவைப் போற்றுகின்ற இந்த விழாவிலே ஊக்கப்படுத்தப்படுவதற்காக விருது பெறுகின்ற ஆசிரியப் பெருமக்களும், பரிசு பெறுகின்ற மாணவ, மாணவிகளும் தொடர்ந்து 'தங்களுடைய கடமையினை இந்தச் சமுதாயத்திற்காக ஆற்றிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அவர்களுக்கெல்லாம் என்னுடைய இதயமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து இந்த அளவில் விடை பெற்றுக் கொள்கிறேன்.

*– சென்னை கலைவாணர் அரங்கில் 1–10–99 அன்று நடைபெற்ற விழாவில், ஆசிரியர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுகள் வழங்கி முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

★ ★ ★

# தாட்கோவின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு வழங்கப்படும் உதவிகள்

| விவரம் | தகுதிகள் | அணுகவேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள்** | |
| **மின்உழவு இயந்திரம் வழங்குதல் (பவர் டில்லர்)** | 3 ஏக்கர் நிலம் சொந்தமாகவோ/ குத்தகையாகவோ பயனாளி பெற்றிருக்க வேண்டும். மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br><br>சாதிச்சான்றிதழ், குடும்ப உணவு பங்கீட்டு அட்டை, சொத்துக்கான சிட்டா அடங்கல், திட்டத்திற்கான தொகை தேவை பட்டியல், நிழற்பட நகல். | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| **நெல் கதிரடிக்கும் இயந்திரம்** | ஆதிதிராவிடர் விவசாயிகள் 3 ஏக்கர் நிலம் சொந்தமாகவோ/குத்தகை யாகவோ பெற்றிருத்தல் வேண்டும். மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு முன்னுரிமை வழங்கப்படும். | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| **பம்புசெட் 5 எச்.பி. திறன் டீசல்** | 2 ஏக்கர் நிலம் சொந்தமாகவோ/ குத்தகையாகவோ இருத்தல் வேண்டும். | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| **இரு காளைகளுடன் கூடிய டயர் வண்டி** | 2. 5 ஏக்கர் நிலம் சொந்தமாகவோ/ குத்தகையாகவோ இருத்தல் வேண்டும். | |
| **மிதிவண்டியுடன் கூடிய விசைத் தெளிப்பான்** | நிலமற்ற விவசாய கூலி வேலை செய்யும் ஆதிதிராவிடர், விசைத் தெளிப்பான் பயன்படுத்தும் முறைகளை அறிந்தவராக இருக்க வேண்டும். | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| **உழவு மாடுகள்** | 2 ஏக்கர் நிலம் கொண்ட ஆதிதிராவிட விவசாயியாக இருக்க வேண்டும். | மாவட்ட மேலாளர், தாட்கோ |

# தாட்கோவின் மூலம்

# ஆதிதிராவிடர்க்கு வழங்கப்படும் தனிநபர் தொழில்முனைவோர் திட்டங்கள்

| விவரம் | வரையறைகள் | அணுகவேண்டிய அலுவலர் |
|---|---|---|
| லாரி, டிராக்டர், விசை உழவு இயந்திரம், மினிவேன், ஆட்டோ, கோழிப்பண்ணை, சிறு பால் பண்ணை, துணி ஏற்றுமதி, கருங்கல் நிறுவனம், கணிப்பொறி நிலையம், நகலக இயந்திரம் | ★ ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும்.<br>★ தேர்வு செய்யும் தொழிலை முனைப் புடன் செயல்படுத்தும் ஆர்வம் இருக்க வேண்டும்.<br>(திட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் மானியம் மற்றும் விளிம்புத் தொகை யுடன் கூடிய கடன் உதவிகள் ரூ.7.5 இலட்சம் வரை வழங்கப்படுகின்றன.) | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| **ஆதிதிராவிடர் மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்** | | |
| ஆதிதிராவிடர் மகளிர் சமுதாயத்தை மேம்படுத்தவும், தன்னம்பிக்கையினை உறுதிப்படுத்தவும், நாட்டிலேயே முதன்முதலாக மகளிர்க்கான சிறப்பு தொழில் முனைவோர் திட்டம் உருவாக்கி அவர்கள் தன் வருமானத்தைப் பெருக்கிட உதவிடும் திட்டம். | ★ தமிழக மகளிர் மேம்பாட்டுக்கழகத்தின் மூலம் செயல்படுத்த முன்னுரிமை வழங்கப்படும்.<br>★ மகளிர் குழுக்கள் 10 – 15 என்ற எண்ணிக்கையில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>★ 3 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட சுயஉதவிக் குழுவாக இருக்க வேண்டும்.<br>★ மகளிர் நலனில் அக்கறை, முன் அனுபவம் இருக்க வேண்டும்.<br>★ சங்க பதிவு சட்டத்தின் கீழ் 2 ஆண்டுகட்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.<br>★ நிதி ஆதாரம் கொண்டதாக இருக்க வேண்டும்.<br>★ குறைந்தது 10 ஆண்டுகள் சமூகப் பணி புரிந்த அனுபவமும், நற்பெயரும் பெற்றிருக்க வேண்டும். | மாவட்ட மேலாளர், தாட்கோ |

# முதலமைச்சரின் போலீஸ் பதக்கங்கள்

## தமிழக அரசு அறிவிப்பு

சிறப்பாக சேவை செய்த 32 காவல் துறையினருக்கு முதலமைச்சரின் போலீஸ் பதக்கம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1. கே. சந்திர மனோகரன், துணை போலீஸ் சூப்பிரண்டு, தமிழ்நாடு அதிரடி போலீஸ் படை, சென்னை.
2. பி. சக்திவேல், உதவி போலீஸ் கமிஷனர், சைதாப்பேட்டை, சென்னை.
3. ஏ. சவுந்திரராஜன், இன்ஸ்பெக்டர், காஞ்சிபுரம்.
4. மார்டின் டி. பெரோஸ் அந்தோணி, இன்ஸ்பெக்டர், சிறப்பு போலீஸ் பிரிவு (சி.ஐ.டி.) சென்னை.
5. டி. வேதமுத்து, இன்ஸ்பெக்டர், ஏழுகிணறு, சென்னை.
6. கே. சேதுராமன், இன்ஸ்பெக்டர், "கியூ" பிராஞ்ச் சி.ஐ.டி. இராமநாதபுரம்.
7. எஸ். மரகதசுந்தரம், இன்ஸ்பெக்டர், "கியூ" பிராஞ்ச் சி.ஐ.டி. மதுரை.
8. என். ராஜேந்திரன், இன்ஸ்பெக்டர், எஸ்.ஐ.யூ. எஸ்.பி.சி.ஐ.டி., மதுரை.
9. எம்.ஜி. அரிதாஸ், இன்ஸ்பெக்டர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, விருதுநகர்.
10. ராபர்ட் பியானி, இன்ஸ்பெக்டர், லஞ்ச ஒழிப்புத்துறை, கோவை.
11. அனார்கலி பேகம், பெண் போலீஸ் இன்ஸ்பெக்டர், திருச்சி.
12. ஏ. அழகிரிசாமி, இன்ஸ்பெக்டர், தமிழ்நாடு சிறப்பு போலீஸ் படை 3–வது பட்டாலியன், டெல்லி.
13. எம். ஒப்பில்லாமணி, சப்–இன்ஸ்பெக்டர், ரெயில்வே போலீஸ், சென்னை.
14. வி. ராமச்சந்திரன், சப்–இன்ஸ்பெக்டர், ரெயில்வே போலீஸ், திருச்சி.
15. ஒ. வெங்கடசாமி, சப்–இன்ஸ்பெக்டர், இராமநாதபுரம்.
16. பி. முத்துசாமி, சப்–இன்ஸ்பெக்டர், சிவகங்கை.
17. ஆர். இருளப்பன், தலைமைக் காவலர், மதுரை.
18. ஆறுமுகம், தலைமைக் காவலர், டிஜிபி அலுவலகம், ஸ்டோர்ஸ்.
19. ஏ. ராஜா, தலைமைக் காவலர், ரெயில்வே போலீஸ், திருச்சி.
20. எம். நாராயணன், தலைமைக் காவலர், கோவை.
21. சுப்பிரமணி, தலைமைக் காவலர், கோவை நகரம்.
22. ராமதாஸ், தலைமைக் காவலர், கோவை நகரம்.
23. என்.டி. வெங்கடேசன், தலைமைக் காவலர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, வேலூர்.
24. பி. ஜெயலட்சுமி, பெண் போலீஸ், தஞ்சை.
25. தங்கராஜ், ஹவில்தார், தமிழ்நாடு சிறப்பு போலீஸ், 5–வது பட்டாலியன், ஆவடி.
26. பி.டி. தியாகராஜ மேனன், ஹவில்தார், தமிழ்நாடு சிறப்பு போலீஸ், 6–வது பட்டாலியன், மதுரை.
27. ரவிச்சந்திரன், முதல் நிலை காவலர், கோவை நகரம்.
28. வி. தியாகராஜன், முதல் நிலை காவலர், ரெயில்வே போலீஸ், சென்னை.
29. செல்வநாயகம், காவலர், கோவை நகரம்.
30. பழனிச்சாமி, காவலர், கோவை நகரம்.
31. சங்கரன், காவலர், லஞ்ச ஒழிப்புப் பிரிவு, நெல்லை.
32. நவநீதகிருஷ்ணன், காவலர், லஞ்ச ஒழிப்புப் பிரிவு, சென்னை.

துணை கமிஷனர் மற்றும் உதவி கமிஷனருக்கு தலா 5 ஆயிரம் ரூபாயும், இன்ஸ்பெக்டர்கள், சப்–இன்ஸ்பெக்டர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபாயும், போலீஸ்காரர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சர் பதக்கத்துடன் வழங்கப்படும்.

இவ்வாறு உள்துறைச் செயலாளர் திருமதி. சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

★ ★ ★

# பொது விநியோகம் - அரிசி விலை குறித்து தமிழக அரசு விளக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர், தலைமைச் செயலகத்தில் உணவு, பொது விநியோகத் திட்டம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் பொது விநியோகத் திட்டச் செயலாக்கம் குறித்து ஆய்வு செய்தார். அப்பொழுது, நியாய விலைக் கடைகளில் வழங்கப்பட்டு வரும் அரிசியின் விலை குறித்தும், அது பற்றி ஒரு சில பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தற்போது ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் ஒரு நபர் மட்டுமே இருந்தாலும் குறைந்தபட்சம் 12 கிலோ அரிசியும், மூவருக்கு மேல் இருந்தால் அவர்களுக்கு அதிகபட்ச அளவாக 20 கிலோ அரிசியும், மாதம் ஒன்றுக்கு குடும்பத்திலுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. 1996ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்பு, ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் அதிகபட்ச அளவாக 12 கிலோ அரிசிதான் ஐந்தாண்டு காலமும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது வழங்கப்படும் 20 கிலோ அரிசியில், கிலோ ஒன்றுக்கு ரூ.3.75 என்ற விலை விகிதத்தில் 17 கிலோ உயர் ரக அரிசியும், கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்ற விகிதத்தில் மீதமுள்ள 3 கிலோ சாதாரண ரக அரிசியும் வழங்கப்பட்டது.

சாதாரண ரக அரிசி போதுமான அளவு கையிருப்பில் இல்லாதபோது, நியாய விலைக் கடைகளில் ஒரு குடும்ப அட்டைதாரருக்கு உரிய உயர்ந்தபட்ச அளவான 20 கிலோ அரிசியையும், உயர் ரக அரிசியாக கிலோ ஒன்றுக்கு ரூ.3.75 என்ற விலையில் விற்கலாம் என்று ஏற்கெனவே 23–4–1999 அன்று நியாய விலைக் கடைகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் சாதாரண ரக அரிசி போதுமான அளவு இருப்பில் இல்லாதபோது குடும்ப அட்டைதாரர்களுக்கு 20 கிலோ அரிசியும் கிலோ ஒன்றுக்கு ரூ.3.75 என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதைத்தான் சில பத்திரிகைகள் அரிசி விலையை அரசு உயர்த்திவிட்டதாக செய்தி வெளியிட்டுள்ளன.

மத்திய அரசு, மாநில அரசுக்கு வழங்கி வரும் அரிசியின் விலையை அவ்வப்போது உயர்த்தி வருகிறது. அதன் தொடர்பாக மாறுதல் செய்யப்பட்ட பொது விநியோகத் திட்டம் 1–6–1997 முதல் நாடு முழுவதும் நடைமுறைக்கு வந்தது. அதன்படி 45,790 டன் அரிசி மட்டுமே குவிண்டால் ஒன்றுக்கு ரூ.350 என்ற வீதத்தில் தமிழக அரசுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. மீதமுள்ள அரிசி, 63,440 டன்களுக்கு, 1–12–1997 முதல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.700 என்ற வீதத்தில் நிர்ணயம் செய்தது. 29–1–1999 முதல் 63,440 டன்களுக்கு, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.905 வீதம் விலை நிர்ணயம் செய்து வழங்கியது.

மத்திய அரசு வழங்கிய அரிசியின் ஒதுக்கீடு மாநிலத்தின் தேவைக்கு போதுமானதாக இல்லாததால், தமிழக விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 1995–96இல் சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.360–க்கும், சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.375–க்கும், மிகச் சன்ன ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.395–க்கும் வாங்கப்பட்டது. இத்துடன், இடைநிகழ் செலவாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.5 மட்டுமே கூடுதலாக வழங்கப்பட்டது.

ஆனால் இந்த ஆட்சியில் தற்போது கொள்முதல் செய்யப்படும் நெல் குவிண்டால் ஒன்றுக்கு சாதாரண ரக நெல்லுக்கு ரூ.490 என்றும், 'ஏ' கிரேடு ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.520 என்றும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்துடன் இடைநிகழ் செலவாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35 வழங்கப்படுகிறது. கட்டாய கொள்முதல் காலங்களில் ரூ.50 வழங்கப்படுகிறது. நெல் கொள்முதல் விலையிலும், மத்திய தொகுப்பு அரிசி கொள்முதல் விலையிலும் உயர்வு ஏற்பட்டிருந்தாலும், இந்த அரசு




குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையில் எந்த உயர்வையும் செய்யவில்லை.

அதேபோல இந்த அரசு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசியின் அளவில் எந்த மாற்றமும் செய்யாமல் 20 கிலோவாக வழங்கி, தொடர்ந்து பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாக பொது விநியோகத் திட்டத்திற்காக செலவிடப்படும் மானியத் தொகை பெரிய அளவில் உயர்ந்துள்ளது. உதாரணமாக, 1995–96இல் செலவிடப்பட்ட மானியத் தொகையின் அளவு ரூ.600 கோடி ஆகும். 1998–99ஆம் ஆண்டு இது சுமார் ரூ.950 கோடியாக உயர்ந்துள்ளது. நடப்பு ஆண்டில் (1999–2000) இந்த மானியம் ரூ.1200 கோடியாக அதிகரிக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சாதாரண ரக அரிசி போதுமான அளவு கையிருப்பில் இல்லாத காரணத்தினால், குடும்ப அட்டைதாரர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த அதிகபட்ச அளவான 20 கிலோ என்பதில் எந்தவிதமான மாற்றமும் செய்யாமல், விலையையும் உயர்த்தாமல், ரூ.2 விலைக்கு மூன்று கிலோ அரிசி வழங்கப்பட்டதை மட்டும் நிறுத்திவிட்டு 17 கிலோவுக்குப் பதிலாக 20 கிலோ அரிசியையும், கிலோ ஒன்றுக்கு ரூ.3.75 என்ற விலையில் தொடர்ந்து வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

மற்ற மாநிலங்களில் விற்கப்படும் அரிசியின் அளவையும் விலையையும் இங்கே குறிப்பிடுவது மேலும் நிலைமையை தெளிவாக்கும்.

கேரளாவில் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ஒரு நபருக்கு ஒரு கிலோ வீதம் கிலோ ஒன்றுக்கு ரூ.9.60 வீதமும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.3.90 வீதமும் ஒரு குடும்பத்திலே எவ்வளவு பேர் இருந்தாலும் அதிகப்பட்சமாக இரண்டரை கிலோ அரிசிதான் வாரம் ஒன்றுக்கு வழங்கப்படுகின்றது.

மேற்கு வங்காளத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு இரண்டு கிலோ அரிசி வீதம் கிலோ அரிசி ஐந்து ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது.

ஆந்திராவில் மாதம் ஒன்றுக்கு ஒரு நபர் உள்ள குடும்பத்திற்கு நான்கு கிலோ வீதம் ஒரு கிலோ அரிசி வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு ரூ.3.50 வீதம் விற்கப்படுகின்றது. ஆந்திராவில் அதிகப்பட்சமாக 20 கிலோ அரிசி வழங்கப்படுகின்றது. வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.9.50 வீதம் அதிகப்பட்சம் 20 கிலோ வழங்கப்படுகின்றது.

கர்நாடகா மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு அதிகப்பட்சமாக பத்து கிலோ வரை, கிலோ ஒன்றுக்கு விலை ரூ.3.50 வீதம் வழங்கப்படுகின்றது. வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.9.80 வீதம் அதிகப்பட்சமாக பத்து கிலோ வரை வழங்கப்படுகின்றது.

நமது தமிழ்நாட்டிலேதான் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்கள், கீழே உள்ளவர்கள் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் அதிகப்பட்சமாக 20 கிலோ அரிசி வழங்கப்படுகின்றது.

1995–96இல் பொது விநியோகத் திட்டத்திற்கு அரசு வழங்கிடும் மானியம் ரூ.600 கோடியாக இருந்தது. இப்போது 1999–2000இல் ரூ.1,200 கோடியாக வழங்கவேண்டிய அளவுக்கு அதாவது மானியம் இரண்டு மடங்காக உயர்ந்துவிட்ட நிலையிலும், ஏழை எளிய மக்களின் நலன் கருதி, இதுவரை வழங்கப்பட்டு வந்த அரிசியின் அளவிலும், விலையிலும் எவ்வித மாற்றமும் இன்றி, தொடர்ந்து வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது.

**– உணவுத்துறை, தமிழ்நாடு அரசு**

★ ★ ★

# மரம் நடுக! மழை பெறுக! சின்னத் தம்பி!

– இரா. சுப்ரமணியன்



மழை நீரால் தேங்குது பார்! சின்னக்குட்டை!
அதைத் தூர்க்காமல் விட்டாலோ கொசுவின் சேட்டை!
சுற்றுப்புறம் அசுத்தமாய் விடுகிற தூய்மைக் கேட்டை
அனுமதித்தால் துவங்கிடுமே நோய்களின் வேட்டை
பூ இருக்கும்! மரம் இருக்கும்! புவி மேலே
அதைக் காக்கும் கடமை இருக்கும் உன் கையாலே
காடு செழித்தால் நாடு செழிக்கும் தன்னாலே
மரம் வளர்த்தால் மழை கிடக்கும் பின்னாலே
சுத்தத்தைப் பேணிப் பார்! உயர்வாக
நூறாண்டு நலம் பெறலாம்! தெளிவாக
முன்னவர்கள் காத்த புவி! முடமாக
விடலாமா? புவித்தூய்மை காப்போம் இனி திடமாக
அமைதி சுத்தம் வாழுகிற இடமாக
புவிகாத்து இயற்கையைக் காத்திடுவோம் வளமாக
உடல் சுத்தம் குடல் சுத்தம் செய்தாலே
தனிமனித சுத்தத்தின் உயர்வாகும்!
சுற்றுப்புறத் தூய்மையினை செய்தாலோ – அது
மனித குலம் சுகப்படும் வழியாகும்!
மரம் நடுக! மழை பெறுக! சின்னத்தம்பி!
வருங்காலம் வருகிறது! உன்னை நம்பி!

# வேளாண்மை விற்பனைத்துறை மூலம்

# விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்

**திட்டம்**

விவசாயிகள் கொண்டு வரும் விளைபொருட்களை விற்பனைச் செய்தல்

**விவரம்**

16 விற்பனைக் குழுக்களில் கட்டுப்பாட்டில் உள்ள 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மறைமுக ஏலம் மூலமாக தரத்திற்கேற்ப போட்டி விலைக்கு விற்பனை செய்து விவசாயிகளை நல்ல விலை அடைய செய்தல்.

**வரையறைகள்**

அனைத்து விவசாயிகள்

**அணுகவேண்டிய அலுவலர்**

கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தனி அலுவலர்/செயலாளர், மாவட்ட விற்பனைக் குழு

★ ★ ★

**திட்டம்**

விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன் வழங்குதல்

**விவரம்**

விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டிலுள்ள 108 ஊரக திட்டங்கள் மற்றும் 39 இதர திட்டங்களிலும் விவசாயிகள் அறுவடைக்காலங்களில் குறைந்த விலையில் விற்று நஷ்டம் அடைவதை தவிர்க்கும் பொருட்டு விளைபொருட்களின் மொத்த மதிப்பில் 75% அல்லது அதிகபட்சமாக ரூ.25,000 வரை பொருளீட்டுக் கடன் வழங்கப்படும்.

**வரையறைகள்**

சிறு/மிகச் சிறு விவசாயிகளுக்கு விளைபொருட்கள் மதிப்பில் 75% மற்றும் இதர விவசாயிகளுக்கு 50% பொருளீட்டுக் கடனாக வழங்கப்படும்.

**அணுகவேண்டிய அலுவலர்**

கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தனி அலுவலர்/செயலாளர், மாவட்ட விற்பனைக் குழு

**திட்டம்**

தமிழ்நாடு உழவர் நலநிதித் திட்டம்

**விவரம்**

விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் ஒரு வருடத்தில் ஒரு மெட்ரிக் டன் விளைபொருட்களை விற்பனை செய்த விவசாயிகள்/குத்தகைதாரர்கள் விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தர ஊனமுற்றாலோ ரூ.25,000 உதவித்தொகை வழங்கப்படும்.

**வரையறைகள்**

அனைத்து விவசாயிகள்

**அணுகவேண்டிய அலுவலர்**

கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தனி அலுவலர்/செயலாளர், மாவட்ட விற்பனைக் குழு

★ ★ ★

**திட்டம்**

கிராமங்களில் உலர்களங்கள் அமைத்தல்

**விவரம்**

1999–2000ஆம் நிதியாண்டில் ரூ.297.50 இலட்சம் மதிப்பில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களில் 170 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு 20 x 20 சதுர மீட்டர் பரப்பளவில் உலர்களங்கள் கட்டப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஏற்கெனவே 1996–97ஆம் ஆண்டில் 60 கிராமங்களிலும் 1998–99ஆம் ஆண்டில் 100 கிராமங்களிலும் உலர்களங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

**வரையறைகள்**

உலர்களங்கள் கிராமப் பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அனைத்து விவசாயிகளும் இலவசமாகப் பயன் படுத்தலாம்.

**அணுகவேண்டிய அலுவலர்**

தனி அலுவலர்/செயலாளர், மாவட்ட விற்பனைக் குழு

★ ★ ★

### திட்டம்

விவசாயிகளுக்குப் பரிசு அளிக்கும் திட்டம்

### விவரம்

1 டன் நெல்லுக்கு ஈடான விளைபொருளை விற்பனைச் செய்திருக்க வேண்டும். விளைபொருளை அதிக தொகைக்கு விற்பனை செய்த சிறு/ குறு விவசாயிகள்/இதர விவசாயிகளில் தலா ஒருவர் வீதம் 260 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு மொத்தம் 780 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.2,000 மதிப்புள்ள பரிசுப் பொருட்கள் வழங்கப்படும்.

### வரையறைகள்

அனைத்து விவசாயிகள்
(புதுக்கோட்டை மாவட்டம் தவிர)

### அணுகவேண்டிய அலுவலர்

கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தனி அலுவலர்/செயலாளர், மாவட்ட விற்பனைக் குழு

★ ★ ★

### திட்டம்

கிராமப்புற விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த ஏழை எளிய மாணவ –மாணவிகளுக்கு நிதி உதவி வழங்குதல்

### விவரம்

1 டன் நெல்லுக்கு ஈடான விளைபொருளை விற்பனை செய்த விவசாயக் குடும்பங்களைச் சார்ந்த விண்ணப்பிக்கும் மாணவ/மாணவியரில் கடந்த ஆண்டில் ஒரு படிப்பில் அதிக மதிப்பெண் பெற்ற சிறு/குறு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த மாணவ/மாணவியர்களில் தலா ஒருவர் வீதம் ஆறாம் வகுப்பில் இருவர், +1 வகுப்பில் இருவர் மற்றும் கல்லூரி முதலாண்டு படிப்பில் இருவர் வீதம் மொத்தம் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு 6 பேர் வீதம் 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு 1620 மாணவ/ மாணவியரைத் தேர்வு செய்து நிதியுதவி வழங்கப்படும்.

### வரையறைகள்

அனைத்து விவசாயக் குடும்பங்களின் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ–மாணவியர்கள்.

### அணுகவேண்டிய அலுவலர்

கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தனி அலுவலர்/செயலாளர், மாவட்ட விற்பனைக் குழு

★ ★ ★

### திட்டம்

ஒருங்கிணைந்த சுற்றுலாத் திட்டம்

### விவரம்

அண்டை மாநிலங்கள் மற்றும் நம் மாநிலத்தில் பிற மாவட்டங்களில் நடைபெறும் விற்பனை முறைமைகள்/வசதிகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள உதவியாக விவசாயிகள்/வியாபாரிகள் ஒருங்கிணைந்த சுற்றுலாத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### வரையறைகள்

1 டன் நெல்லுக்கு ஈடான விளைப் பொருளை விற்பனை செய்திருக்க வேண்டும். ஜனவரி மாதம் செய்யப்படும் விளம்பரத்தினைத் தொடர்ந்து விண்ணப்பம் செய்தல் வேண்டும். அதிகம் விற்பனைச் செய்த விவசாயிகளில் மாவட்டத்திற்கு இருவர் தேர்வு செய்யப்படுவர். கொள்முதல் மதிப்பின் அடிப்படையில் அதிக கொள்முதல் செய்த வியாபாரிகளில் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் தேர்வு செய்யப்படுவர்.

### அணுகவேண்டிய அலுவலர்

கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தனி அலுவலர்/செயலாளர், மாவட்ட விற்பனைக் குழு மற்றும் வேளாண்மை விற்பனை ஆணையர்

★ ★ ★

### திட்டம்

இலவச மருத்துவ வசதிகள்

### விவரம்

விழுப்புரம், செஞ்சி, திருக்கோவிலூர், விருத்தாச்சலம், திருவண்ணாமலை, சேத்துப்பட்டு, வந்தவாசி, நாமக்கல், கும்பகோணம் மற்றும் அவல்பூந்துறை ஆகிய 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

### வரையறைகள்

அனைத்து விவசாயிகள்

## அணுகவேண்டிய அலுவலர்

சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர் மற்றும் தனி அலுவலர்/செயலாளர், மாவட்ட விற்பனைக் குழு

## திட்டம்

இலவச தரம் பிரிப்பு வசதிகள்

## விவரம்

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தரம் பிரிப்பு வசதிகள் செய்யப்படுகின்றன. மேலும், அவ்விடங்களில் பின் அறுவடை தொழில்நுட்பம் குறித்த பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

## வரையறைகள்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வருகை தரும் அனைத்து விவசாயிகள்

## அணுகவேண்டிய அலுவலர்

கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தனி அலுவலர்/செயலாளர், மாவட்ட விற்பனைக் குழு

★ ★ ★

## திட்டம்

வியாபாரிகளுக்குப் பொருளீட்டுக் கடன்

## விவரம்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விளைபொருட்களை விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு உடனடியாகப் பணம் பட்டுவாடா செய்வதற்காகச் சோதனை அடிப்படையில் 100 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்படுத்தப்படுகிறது.

## வரையறைகள்

வியாபாரிகள் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். விளைபொருளின் மதிப்பில் 75% தொகையை விவசாயிகளுக்குப் பட்டுவாடா செய்திருக்க வேண்டும். மொத்த கொள்முதலில் ரூ.1 இலட்சம் அல்லது 50%. இதில் எது அதிகமோ அத்தொகை பொருளீட்டுக் கடனாக வழங்கப்படும்.

## அணுகவேண்டிய அலுவலர்

கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தனி அலுவலர்/செயலாளர், மாவட்ட விற்பனைக் குழு ★



# உருவத்தினை காணோம்

செங்கதிரோன் மலைமுகட்டில்
ஊடுருவி வருவான்
சிவந்தமேனி கொப்பளிக்க
சட்டையின்றி அலைவான்.

பொங்குபனி அங்குவந்து
மானம்காக்க அணைக்கும்
புறப்பட்ட ஒளிவரிசை
புன்னகைத்து இணைக்கும்.

விரல் விட்டு எண்ணும் நேரம்
விடியலினை கண்டோம்
விடிந்து விட்ட நேரத்திலே
பனித்துளியை காணோம்.

பாவம் அந்த பனித்துளியை
பார்த்தவர்கள் உண்டா?
உதவி செய்ய வந்தவனின்
உருவத்தினை காணோம்.

– கு. ஞானசேகரன்





# வளமை பெற்றிடும் தமிழ்நாடு





வளமை பெற்றிடும் தமிழ்நாடு
வான்புகழ் வள்ளுவத் திருநாடு
பழமை மிக்கப் பண்பாட்டால்
பாரதம் காத்திட தினம்நாடும்.

பெரியார் வாழ்ந்த தமிழ்நாடு
பேரறிஞர் அண்ணா புகழ்பாடும்
கரும வீரர் காமராசர்
கட்டிக் காத்த கல்விக்கூடம்.

கலைஞர் கரங்கள் எந்நாளும்
கட்டி யெழுப்பும் தமிழ்நாடு.
கலைகள் பற்பல உண்டிங்கு
கணினி பரப்பும் நிலையுண்டு

சாதி பேதம் மாற்றிடவே
சமைத்த திட்டம் பலவுண்டு
சமத்துவ புரத்தின் திறப்பாலே
சமத்துவம் காக்கும் தமிழ்நாடு

**– கவிஞர் எஸ். எம். செபாஸ்டின்**

# பாண்டியரும் செப்பேடுகளும்

நம் தமிழ் நாட்டிலே செந்தமிழ்நாடு என்று சிறப்பித்துப் பேசப்பட்டது பாண்டிநாடு, 'தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டிநாடு' என்பது மணிவாசகர் வாக்கு. 'முத்தும் முத்தமிழும் கொழித்த நாடு' எனக் கம்பன் முதலான புலவர்கள் பாண்டி நாட்டைப் பாராட்டுகின்றனர். இந்நாட்டை ஆண்டுவந்த பாண்டியர் குலத்தை 'ஆதி இன்னது என்று ஓதுதற்கு அரிய வழுதியின் தொழு குலம்' என்று திராவிட ஆராய்ச்சித் தந்தையாக மதிக்கப்படும் மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை கூறியுள்ளார். 'பாண்டியர்' என்ற சொல் பண்டு என்ற சொல்லுடன் தொடர்புடைய்து இதைப் 'பண்டையோர்' என்பதன் மரூஉ முடிபு எனலாம். பாண்டிய அரசு சங்க காலத்துக்கு முன்பே தொடங்கி, கி.பி.17–ம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் நிலவியது.

தமிழக வரலாற்றுப் பாதையில், பண்டைப் பழந் தமிழர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை நமக்கு நன்கு புலப்படுத்தும் சங்க இலக்கியச் சான்றுகள் நிச்சயமான ஒரு மைல்–கல்லாகும். இதைப் பலரும் இன்று அறிந்திருக்கிறார்கள். சங்க காலம் குறித்து வாதங்களும் எதிர் வாதங்களும் ஆராய்ச்சியாளரிடையே நிகழ்ந்ததுண்டு. நமக்குக் கிடைத்திருக்கும் பாட்டும் தொகையுமாகிய பழந் தமிழ் நூல்கள் கி.பி. முதல் மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகளுக்கு உரியன என்பது வரலாற்றுப் பேராசிரியர் க.அ.நீலகண்ட சாஸ்திரியாரின் கருத்து. செம்மையாக ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டிய விஷயம் இது. பாண்டியர்கள் தங்கள் தலைநகரான மதுரையில் தமிழ்ச்சங்கம் நிறுவியிருந்தனர் என்பதற்குப் பிற்காலச் சாசனச் சான்றுகளும் உண்டு..

தமிழ் மொழிச் சாசனங்கள் – கல்லிலும் செம்பிலும் பொறிக்கப்பட்டவை, கி.பி. ஆறாம் நூற்றாண்'டின் நடுப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாகக் கிடைக்கின்றன. அதற்கு முன்னும் பிராமி எழுத்தில் சில கல்லெழுத்துச் சாசனங்கள் கிடைத்திருக்கின்றன. அவை கிறிஸ்து–அப்தத்தின் தொடக்கத்திற்கு முன்னும் பின்னுமான நூற்றாண்டுகளுக்கு உரியவை; ஒன்றிரண்டு வரிகளில் அமைந்த சிறிய சொற்றொடர்களாயினும் சில பழைய வரலாற்றுக்குறிப்புகளை உடையன என்பது தெளிவு. இவை இன்னும் ஐயம் அறத்தெளிவாக ஆராயப்படவில்லை. இச்சாசனங்களையும், தொடர்ச்சியாகக் கிடைத்திருக்கும் மற்றச் சாசனங்களையும் ஆராய்வது, பழைய வரலாற்றைப் பல துறைகளிலும் ஆராய்ந்து தேர்ந்து எழுதுவதற்கு இன்றியமையாதது. இலக்கியச் சான்றுகளைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கும் சாசனங்கள் துணைபுரிகின்றன.

உதாரணமாக, கடைச் சங்க காலத்துப் பாண்டியருள் மிகச் சிறந்தவனான தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைச் சங்க இலக்கிய வாயிலாகக் காண்பது போல் செப்பேடுகள் வாயிலாகவும் காண்கிறோம். இவனது காலம் கி.பி. 2–ம் நூற்றாண்டு என்பர். ஏறத்தாழ கி.பி. 210–ஆம் ஆண்டை ஒட்டி அமைந்திருந்ததாக ஆசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கூறுவர்.

இது நன்கு ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். நக்கீரர், மாங்குடி மருதனார் என்ற இருபெருஞ் சங்கப்புலவர்கள் இவனைப் பாடியிருக்கின்றனர்; இவனைப் பற்றி வேறு சில சங்ககாலப் பாடல்களும் உண்டு. தான் ஒருவனாக நின்று பேரரசர் இருவரை – 'தன்னொக்கும் இருவேந்தரை' – வென்றவன் இவன் என்பது செப்பேட்டு வாசகம். முடிவேந்தர் குடியினரான சோழன் ஒருவனும் சேரன் ஒருவனும் முன்னணியில் நிற்கக் குறுநிலத்தரசர் ஐவரும் உடன் எழுந்து பாண்டி நாட்டில் படையெடுத்தனர். நெடுஞ்செழியன் ஆலங்கானப் போர்க்களத்தில் பெருவெற்றி பெற்றான். இப்போரின் விவரங்களோடு, இவன் காலத்து மதுரை மாநகர், தாமரை மலர்ந்திருப்பது போன்ற வடிவில் அமைந்து, பல்வகைத் தொழிலும் சிறப்புற்று விளங்கியது. இந்த அரசன், வீரர் புலவர் பாணர் சூழ வீற்றிருந்து முத்தமிழையும் வளர்த்தவன்–என்பது போன்ற செய்திகளையும் சங்கப்புலவர் வாயிலாகத் தெரிந்து கொள்கிறோம்.



நெடியோன் என்ற வடிம்பலம்ப நின்ற பாண்டியனும்; பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும் தலையானங்காலத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு முற்பட்டவராவர். சின்னமனூர்ச் செப்பேடுகளிலும் வேள்விக்குடிச் செப்பேடுகளிலும் வடிம்பலம்ப நின்ற பாண்டியனைப் பற்றிய மூன்று கதைகள் குறிக்கப்படுகின்றன; இவை பாண்டியரது தொன்மை மாட்சியை நினைவூட்டுகின்றன. புறநானூற்றின் ஒன்பதாம் பாட்டிலிருந்து, இவன் பஃறுளி என்றதோர் ஆற்றை வெட்டுவித்தான் என்றும் கடல் தெய்வத்திற்கு விழா எடுத்தான் என்றும் தெரியவருகிறது.

சின்னமனூர்ச் செப்பேடுகளில் பாண்டியரின் முன்னோருள் ஒருவன் ஆயிரம் வேள்விகள் இயற்றியதாக ஒரு செய்தி கிடைக்கிறது. இவன் வடிம்பலம்ப நின்ற பாண்டியனின் வழி வந்தவன் எனலாம். இப்பாண்டியனை வேள்விக்குடிச் செப்பேடுகள் 'பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியெனும் பாண்டியாதிராசன்' எனக் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியமாகிய மதுரைக் காஞ்சி இம்மன்னனைப் 'பல்சாலை முதுகுடுமி' என்கிறது. சாலை, இங்கே வேள்விச்சாலை. இவனது இயற்பெயர் குடுமி அல்லது முதுகுடுமி என்று ஊகிக்கலாம். நெட்டிமையார் முதலான பல சான்றோர்களை இவன் ஆதரித்தான்; புலவர்களுக்கும் பாணர்களுக்கும் பொன்னும் பொருளும் வழங்கினான். இவன் பல்வேறு வகையான வேள்விகளைச் செய்தான் என்பது இவனது பெயரொடு இசைந்து அமைந்திருக்கும் அடைமொழியிலிருந்தே தெரிகிறது.

முதுகுடுமிப்பெருவழுதி ஆட்சிபுரிந்து வருகையில், தனது நாட்டுப் பாகனூர்க் கூற்றத்தில் (இப்பொழுதுள்ள சோழவந்தான் பகுதியில்) வையை ஆற்றங்கரையில் சோலைகள் சூழ்ந்த ஓர் இடத்தில் வேள்வியொன்றைச் செய்வித்தான். வேள்விக்குடிச் செப்பேடுகளில் இப்பிரதேசம் 'மலர்ச்சோலைப் பாகனூர்க் குற்றம்' என்றும் 'மாமலர்ச் சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும் பாகனூர்க் கூற்றம்' என்றும் கூறப்படுகிறது. அந்த நாளில் நற்கொற்றன் என்னும் வேதியன் கொற்கையில் வேதவேள்வியில் சிறந்தவனாகப் பேர் பெற்றிருந்தான். அவனைக் கொற்கை கிழான் எனச் சிறப்பித்துப் பேசினர். முதுகுடுமிப் பெருவழுதி அவனை வரவழைத்துப் பாகனூர்க் கூற்றத்தில் ஓரிடத்தில் வேள்வி செய்வித்தான். அந்த வேள்வி வைதிக (வேத) முறையில் இனிது நிறைவெய்தியது என்பதைக் குறிப்பிடுகிறது. 'சுருதிமார்க்கம் பிழையாது' என்று வரும் வேள்விக்குடிச் சாசனப்பகுதி. அவ்வேள்வி நிகழ்ந்த இடத்திற்கு முதுகுடுமிப் பெருவழுதியே 'வேள்விகுடி' எனப் பெயரிட்டான் என்பதும், அந்த வேள்விக்குடியை நற்கொற்றனுக்கு அப்பொழுதே நீரோடு அட்டிக் கொடுத்தான் என்பதும் சாசனச் செய்திகள். இச்சாசனப் பகுதி இப்பாண்டிய மன்னனைச் 'சீரோடு திருவளரச் செய்தார் வேந்தன்' எனச் சிறப்பாய்க் குறிப்பிடுகிறது. இப்பாண்டியனின் சிறப்பைப் புறநானூற்றுப் பாடல்கள் ஐந்து குறிப்பிடுவதையும் காண்கிறோம்.

மதுரைக் காஞ்சியில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற வேறொரு நெடுஞ்செழியனும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் முன்னோருள் ஒருவனாகக் குறிக்கப் பெற்றுள்ளான். இந்த நெடுஞ்செழியனைச் சிலப்பதிகாரத்திலும் சந்திக்கிறோம். இவன் பெயருடன் அமைந்திருக்கும் அடைமொழியிலிருந்து, வடநாட்டு மன்னருள் ஒருவனையோ அல்லது சிலரையோ இவன் புறங்கண்டு புகழ் எய்தியவன் என்று தெரிய வருகின்றது. இந்த அரசன் பாடிய பாட்டொன்றில், சாதியைக் காட்டிலும் கல்வியே சிறப்பு வாய்ந்தது என்று கருத்து வலியுறுத்தப்படுகின்றது. கோவலனைக் கள்வன் என்று எண்ணி வெட்டி வீழ்த்துமாறு கட்டளையிட்டு, உண்மை தெரிந்ததும் 'யானோ அரசன்?

யானே கள்வன்!" என்று நெஞ்சு நடுங்கக் கூறி உயிர் துறந்தவன் இவன்தான்.

கடைச் சங்க காலத்து மன்னரில் கடைசியானவன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்பர். இவன் தந்தைதான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்றும் கூறுவர். கானப்பேர் என்னும் எயில் அல்லது அரணைக் கைக்கொண்டவன் என்பது இவ்வரசன் பெயரிலுள்ள அடைமொழியால் விளங்கும். கானப்பேர் என்பது தற்காலத்துக் காளையார் கோயில்.

இந்த அரசனுக்குப் பின்பு களப்பிரர் பாண்டி நாட்டைக் கைக்கொண்டதாகக் கருதலாம்.

சங்க காலத்தில் வாழ்ந்த சேர சோழர்களைப் பற்றிய செய்திகளையும் குறுநில மன்னர்களைப் பற்றிய செய்திகளையும் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். குறுநில மன்னர்களில் ஆய், பாரி என்பவர்கள் வீரர்களாகவும் வள்ளல்களாகவும் சிறப்பித்துப் பாடப்பெற்றிருக்கிறார்கள். சோழர்களில் கரிகாலனின் பெயர் பிரசித்தமாகக் கூறப்படுகிறது. பிரசித்தி பெற்ற சங்கப் புலவர் பரணரால் பாடப்பெற்றிருக்கும் சேரன் செங்குட்டுவன் சிலப்பதிகாரத்தால் பெரும் புகழ்பெற்றிருப்பதையும், இவன் இலங்கைக் கயவாகு! என்ற அரசனின் காலமாகிய கி.பி.173–95ஐச் சேர்ந்தவன் என்பதையும் பல ஆராய்ச்சியாளர்கள் அறிந்திருக்கிறார்கள். இத்தகைய செய்திகள் பல கிடைப்பதற்குச் சங்க இலக்கியங்கள் வாய்ப்பு அளித்தபோதிலும், இவ்வரலாற்றுத் துணுக்குகளைக் கோவையாக ஒழுங்குபடுத்திக் காலவரையறை செய்வது சாத்தியமில்லை.

எனினும், அக்காலத்துச் சமுதாய நிலையும் பொருளாதார நிலையும் கல்வி நிலையும் பொதுவாகப் பண்பாட்டு நிலையும் சங்க இலக்கியங்களிலிருந்து தெளிவாகின்றன. இவை குறித்த உண்மையான, முழுமையான ஒரு சித்திரமே கிடைத்து விடுகிறது எனலாம். இந்தச் சித்திரத்திலே தமிழுடன் ஆரியமும் இணைந்து கலப்பதைக் காண்கிறோம்; ஆனால் அடிப்படையும் உயிர் நிலையும் தமிழ்ப் பண்பாடுதான். தமிழர்களின் விருந்தோம்பும் பண்பும் இதய விசாலமும், பல்வகைச் சிந்தனைகளையும் இசைபித்துக் கொண்டு இயற்கைப் பாநலம் செறிந்த சங்க இலக்கியங்களை உருவாக்கியுள்ளன. இவையே பிற்காலத் தமிழ் வளர்ச்சிக்கெல்லாம் உயிரூட்டிய ஊற்றுக்கண்கள் எனக் கூறவேண்டும்.

**அரசாங்க நெறியில் மாறுதல்கள்** : களப்பிரர் படையெழுச்சியால் சங்க காலத்தின் இறுதியில் ஒரு நீண்ட சரித்திர இரவு குறுக்கிட்டு மூன்று நூற்றாண்டுகளுக்குமேல் நீடித்தது என்பதை வரலாற்றுப் புலவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். 6ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த இருள் மறைந்து மறுமலர்ச்சிப் பொழுது புலர்வதைக் காண்கிறோம். அரசர்களின் சாசனங்கள் அவற்றின் முதற்காலப் பகுதியில் பிராகிருத மொழியில் காணப்படுகின்றன. ஆதியில் (பல்லவரும் களப்பிரரும் பிராகிருதத்தை அரசு மொழியாகக் கொண்டிருந்தனர்) இடைக்காலப் பகுதியில் சாசனங்கள் வடமொழியிலும், கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கும் பிற்காலப் பகுதியில் வடமொழி தமிழாகிய இருமொழிகளிலும் வரையப்பட்டுள்ளன.

பல்லவர்களின் ஆட்சி சுமார் 6 நூற்றாண்டுகள் நடைபெற்றது அவர்கள் தங்கள் தலைநகராகிய காஞ்சியில் வடமொழியிலுள்ள கலைநூல்களையும் பல்வகைச் சமய நூல்களையும், வடக்கிலுள்ள மக்களும் வந்து கற்குமாறு ஒரு பெருங்கல்லூரியாகிய



கடிகையை நிறுவி அதை நன்கு நடத்தி வந்தனர். அதனால் வடமொழிக் கல்வி தமிழ்நாட்டில் வளம்பெற்றது. பல்லவ ஆட்சி தொடங்கியபோது பௌத்தமும் சைனமும் சிறந்து விளங்கின. பௌத்தம் தன் செல்வாக்கை இழந்தபின் சைனம் தமிழ்நாடு முழுதும் பரவிச் சிறப்புற்றிருந்ததைக் காண்கிறோம். பல்லவர் ஆட்சியின் இடைக்காலத்தில், தமிழகத்தில் தொன்று தொட்டு வழங்கிவந்த சைவ வைணவக் கொள்கைகள் வைதிகக் கொள்கைகளுடன் கலந்து வளர்ந்தோங்கவே, வேத நெறியாகிய வைதிகத்திற்கு மாறுபட்டிருந்த பௌத்த சைனங்கள் வீழ்ச்சியுற்றன. இந்த நிலையில் பக்தி நெறி தமிழ்நாட்டில் சிறப்பாக வளர்ந்தோங்கிச் சைவ நாயன்மார் வாயிலாகவும் வைணவ ஆழ்வார்கள் வாயிலாகவும் இந்து சமயத்திற்கே மறுமலர்ச்சிப் புதுவாழ்வை அளித்திருக்கிறது. வேத வேதாந்தக் கொள்கைகள் செந்தமிழ் மரபுகளை அடிப்படையாகக்கொண்டு கலைகளாகி கோயில்களாகி மக்களின் பொது வாழ்வை வளமும் வனப்புமுறச் செய்தன. சங்ககால நாகரிகம் கோயில் நாகரிகமாகத் தொடர்ந்து வளர்ந்திருப்பதைக் காண்கிறோம்.



களப்பிரர் ஆட்சி பாண்டி நாட்டில் ஏறக்குறைய கி.பி.575 வரை நடைபெற்றது. இது தமிழகம் முழுவதையும் தடுமாறச் செய்து பாண்டி நாட்டில் புரட்சிகரமான மாறுதல்களையும் உண்டாக்கி விட்டது என்பதைச் செப்பேடுகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பௌத்த சமயிகளான களப்பிரர்கள் சோழ நாட்டையும் கைப்பற்றினர். பௌத்த சமயநூல்கள் பாலி மொழியில் எழுதப்பட்டன. சோழரின் தலைநகராயிருந்த உறையூரில் பிறந்து வளர்ந்த புத்ததத்தன் இருமுறை ஈழநாடு சென்று பௌத்த நூல் பயிற்சி பெற்றுச் சோழ நாட்டுக்குத் திரும்பி வந்து பாலி மொழியில் நூல்கள் எழுதி வெளியிட்டான். மேலும், இந்த ஆசிரியன் எளிதில் பௌத்த பிட்சுகள் அறிந்து கொள்ளும்படி விநயவிநிச்சயம் என்ற வேறொரு நூலையும் இயற்றினான். இந்த நூலையும் களப்பிரவேந்தனாகிய அச்சுதவிக்கந்தன் தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்து வந்த காலத்தில் தொடங்கி எழுதி முடிக்கப்பட்டதாக இந்நூலின் இறுதியில் ஆசிரியன் கூறியுள்ளான்.

பாண்டி நாட்டிலும் சோழ நாட்டிலும் அரசு புரிந்த களப்பிரர் சமண சமயத்தையும் தழுவினர். தமிழ்நாட்டில் சமணப் பள்ளிகளில் தங்கியிருந்த முனிவர்கள் தமிழிலக்கிய இலக்கணங்களை நன்கு பயின்று தமிழிலும் நூல்கள் இயற்றலாயினர். வஜ்ர நந்தி என்ற சமண முனிவர் மதுரையில் கி.பி.470–இல் திராவிட சங்கத்தை நிறுவினர்.

களப்பிராது கொடுமைகளிலிருந்து நாட்டை மீட்டுக்கொண்ட கடுங்கோனின் காலம் முதல் பாண்டியர் புத்துயிர் பெற்றனர் என்பதும், இவன் கடைச்சங்கப் பாண்டியரின் வழித்தோன்றலாக மறைந்து வாழ்ந்து வந்தான் என்பதும், இவனே பாண்டியரது முதலாவது ஏகாதிபத்தியத்திற்கு அடிப்படை அமைத்தான் என்பதும் செப்பேடுகள் தெரிவிக்கும் செய்திகள். இம்முதற்பேரரசு, சுமார் மூன்று நூற்றாண்டுகள் நிலவியது.

**நன்றி :**
**பாண்டியர் செப்பேடுகள் பத்து**
**வெளியீடு :**
**உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906

உங்களின் நீண்டநாள்
கனவை நனவாக்கும்
புதிய திட்டம்.

### கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் | மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (3+4) ரூ. | அரசு தள்ளுபடி * ரூ. | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டா[illegible]ளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**




பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



